பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 23 வெள்ளிக்கிழமை (09-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:348

# பயங்கரவாதத்தை முற்றாக ஒடுக்கி யுத்தத்தை விரைவிலேயே முடிப்பேன்!



## ஜனாதிபதி சூளுரை

கொழும்பு,நவம்பர்9

**"பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு எதிராக சர்வதேச சமூகமே திரண்டு நிற்கும் இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி எமது நாட்டிலும் பயங்கரவாதத்தை ஒடுக்கி யுத்தத்தை விரைவில் முடிப்பேன்."**

**- இப்படி சூளுரைத்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

"நீங்கள் ரணில் விக்கிரமசிங்கவை மனதில் கொண்டு ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்கு அளித்தால் உண்மையில் ஆட்சியை நடத்தப் போகிறவர் ரணில் அல்ல; பிரபாகரன் தான். உங்களுக்குப் பிரபாகரன் வேண்டுமா? அல்லது நான் வேண்டுமா?" - இந்தச் சாரப்பட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதி நேற்று இரவு ரூபவாஹினி தொலைக்காட்சியில் தோன்றி கேள்விகளுக்குப் பதில் அளித்தார். அப்போதே அவர் மேற்கண்ட சாரப்பட கேள்வி எழுப்பினார். பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

"இன்றும் மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தப்படாத இரகசிய ஒப்பந்தம் ஒன்றை பிரபாகரனுடன் செய்து கொண்ட ஐ.தே.கட்சிக்கும், தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்கும் எமது நாட்டை 'போதி' செய்து கொடுக்கப் போகிறீர்களா?

"பிரபாகரனுக்கு வடக்கு - கிழக்கை ஐந்து வருடங்களுக்கு தாரைவார்த்து கொடுக்கப்போகிறீர்களா என்பதை நீங்களே (மக்கள்) தீர்மானிக்க வேண்டும்."

- என்றும் ஜனாதிபதி சொன்னார்.

"நாட்டின் சகல மக்களையும் நேசிப்பது போல் தமிழ் மக்களையும் நேசிக்கின்றேன்.

"தமிழ் மக்களுக்கு வழங்கக் கூடிய சகல உரிமைகளையும் வழங்கத் தயாராக இருக்கின்றேன்.

"தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண ரணில் விக்கிரமசிங்க தடையாக இருந்தார்.

"பிரபாகரனுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து இந்நாட்டின் ஒரு பகுதியை நான் அவரிடம் ஒப்படைக்கமாட்டேன் என்பதைத் தெளிவாக கூறி வைக்க விரும்புகிறேன்."

- என்றும் ஜனாதிபதி கூறினார்.

"நான் சொல்ல இருப்பது இது மட்டும்தான். நான் அரசியலுக்கு வந்தது அரசியலை வியாபாரம் ஆக்குவதற்கு அல்ல. என்னுடன் அரசியலில் ஈடுபடுபவர்கள் அரசியலை ஒரு வியாபாரமாகச் செய்கின்றார்கள்.

"மக்கள் எம்மிடம் எதிர்பார்த்தவற்றுள் அநேகமானவற்றை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம். இந்த வருடம் தற்செயலாக ஒரு பின்னடைவு ஏற்பட்டு இருக்கின்றது. உலகில் ஏற்பட்ட பொருளாதாரத்தாக்கம் காரணமாக இலங்கையிலும் பல பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டன. கட்டு

(14 ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.தே.க. - புலிகள் உடன்பாடா?

## பொ.ஐ.மு. பொய்ப் பிரசாரம்! மகாநாயக்கர்கள் சீற்றம்!!

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இரகசிய உடன்படிக்கை இருப்பதாக ஒரு மாயையை ஏற்படுத்தி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பொய்ப் பிரசாரம் செய்துவருகின்றது.

- இவ்வாறு மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்கள் சீற்றத்துடன் கூறியிருக்கின்றனர்.

"தேர்தல் சமயத்தில் அரச ஊடகங்கள் மூலமாக இத்தகைய பொய்ப் பிரசாரத்தைச் செய்வது பொ.ஐ.முன்னணியின் வழமை. புலிகளுடன் ஐதே.கட்சி உடன்பாடோ, இணக்கமோ காணவில்லை என்பதை நான் உறுதிப்படுத்துகிறேன்" - இப்படி மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் வண. றம்புக்வெல ஸ்ரீ விபஸி தேரர் தெரிவித்தார்.

"இது அரசியல் இலாபம் கருதி நடக்கும் பொய்ப் பிரசாரம். புத்தியுள்ள மக்கள் இந்தப் பிரசாரத்தை நம்பமாட்டார்கள். ஆனால் சாதாரண மகக்கள் நம்பக்கூடும். எனவே இந்தப் பொய்யை மறுக்கும் ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை சகல மக்களுக்கும் விநியோகிப்பதுதான் நல்லது." - என்று அஸ்கிரிய பீடாதிபதி வண. புத்தகீர்த்த தேரர் தெரிவித்தார். (உ)

### பொ.ஐ.முவின் தேர்தல் விஞ்ஞாபனம்

கொழும்பு,நவ.9

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தை எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெளியிடவுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்துக்கும், விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையின்றிப் பேச்சு நடத்தும் விவகாரத்துக்கும் அதில் முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கும் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் நாயகம் டி.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

## மங்கள சமரவீரவும் கைதாவார்?

கொழும்பு,நவ.9

கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் இருக்கும் முன்னாள் அமைச்சர் றெஜி ரணதுங்க போன்று அமைச்சர் மங்கள சமரவீரவும் கைது செய்யப்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் ஐதே.கட்சி ஆதரவாளர்கள் சிலர் மீது தெனியாயப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொலீஸார் திரட்டிய விவரங்களின்படி தாக்குதல் நடந்த இடத்தில் அமைச்சர் மங்கள சமரவீரவும் இருந்துள்ளார் என்பது உறுதியாகியுள்ளது.

பொலீஸார் சமர்ப்பித்த அறிக்கைகளைப் பரிசீலனை செய்த மாத்தறை மாவட்ட நீதிபதி மேலும் விவரங்களைத் திரட்டும்படி உத்தரவிட்டுள்ளார்.



- இவ்வாறு ஐ.தே.க ஊடகப் பேசாளர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்குவும் மாத்தறை மாவட்ட ஐ.தே.க வேட்பாளர் சாகல ரத்னாயக்காவும் நேற்றுத் தெரிவித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர்கள் இருவரும் பங்குபற்றினர். தெனியாயப் பகுதியில நடைபெற்ற சம்பவத்தை இவர்கள் விவரித்தனர்.

தாக்கப்பட்டவர்கள் அனைவரும் 22 வயதுக்கு குறைந்த இளைஞர்கள். இவர்களுடைய கைகளில் போஸ்டர்களும் பசை வாளியும் மட்டுமே இருந்தன. நிராயுதபாணிகளான இந்த இளைஞர்களை அமைச்சர் மங்கள சமரவீரவின் அடியாள்களும் குண்டர்களும் சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் விரட்டி விரட்டித் தாக்கினர்.

இவர்களால் தாக்கப்பட்ட 19 வயது

(2 ஆம் பக்கம் பார்க்க)

### ஜே.வி.பி. பிரமுகர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு

கொழும்பு,நவ.9

ஜே.வி.பியின் முக்கிய பிரமுகர்களுக்கு படையினரின் விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

ஜே.வி.பியின் முக்கிய பிரமுகர்களை கொலை செய்வதற்கு விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையினர் தலைநகர் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் எச்சரித்துள்ளதை அடுத்தே விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ-10)

### 100 நாள்களில் தீர்வாம்!

கொழும்பு,நவ.9

பொதுத்தேர்தலின் பின்பு ஐ.தே.கட்சி அரசு அமைக்கும் பட்சத்தில் முதல் நூறு நாள்களில் நாடு எதிர்நோக்குகின்ற முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும்.

கட்சியின் பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு, பொருளாதாரத்தை மேம்படுத்தி, ஜனநாயகத்தை நாட்டில் மீண்டும் நிலைநாட்டுவதே தற்போதுள்ள முக்கியபிரச்சினையாகும்.

பிரதமர் மற்றும் அமைச்சர்கள் ஆகியோரின் பெரும்பான்மை விருப்பத்திற்கேற்பவே ஜனாதிபதி நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-10)

### அதிகாரிகள் 35 பேர் நேற்று வருகை

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்.மத்திய கல்லூரியில் நாளையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ள மக்கள் குறைநிவர்த்தி சேவையில் கலந்துகொள்ளவுள்ள மத்திய, மாகாண அரச அதிகாரிகளில் 35 பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களைச் சேர்ந்த சுமார் 100 அதிகாரிகள் இந்தக் குறை நிவர்த்தி சேவையில் கலந்துகொண்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவுள்ளதாக யாழ்.செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அதிகாரிகளில் ஒருபகுதியினரே நேற்று இங்கு வந்துசேர்ந்துள்ளனர். மிகுதி 65 அதிகாரிகள் இன்று விமானம் மூலம் வந்து சேருவர் என்று தெரிவிக்கப்பட்டது.

### ஓட்டோ சாரதி கடத்தப்பட்டார்

ஏறாவூரில் குடும்பஸ்தரான முஹம்மது ஹஸன் (வயது44) என்ற ஓட்டோ சாரதி நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் ஏறாவூர் புன்னைக்குடா வீதியில் உள்ள பள்ளிவாசலுக்கு தொழுகைக்கு சென்ற சமயம் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டார் என ஏறாவூர் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### நிர்வாணமாக அணிநடை

கொழும்பு,நவ.9

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதி ஒருவரின் கட்டளைக்கிணங்க ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் ஆறுபேர் மிரட்டப்பட்டு, உடைகள் களையப்பட்டு, பொதுஇடத்தில் நிர்வாணமாக அணிநடையில் விடப்பட்டனர் என்று ஐ.தே.கட்சிப் பிரமுக

(14 ஆம் பக்கம் பார்க்க)

### வேலைநிறுத்தம்

கொழும்பு,நவ.9

நடுத்தர மட்டத்திலான தொழில்நுட்ப அதிகாரிகளின் பதவி உயர்வை சரிவர நடைமுறைப்படுத்துவது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து மின்சாரசபை தொழில் நுட்ப அதிகாரிகள் இன்று ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேறப்படாவிடின் 15 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் போராட்டத்தை விஸ்தரிக்கவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர். (ஐ-10)

### புத்தளத்தில் இரு குழுக்கள் மோதல்

கொழும்பு,நவ.9

புத்தளம் இரண்டாம் குறுக்குத் தெருவில் புதன்கிழமை நள்ளிரவு இரு பிரதான கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு இடையே மோதல் நடந்திருக்கிறது. துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

ஓட்டோ ஒன்றில் சென்று கொண்டிருந்த முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்கள் ஆறுபேரை பொலீஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடம் துப்பாக்கி ஒன்றும் இருந்துள்ளது. ஓட்டோவும் கைப்பற்றப்பட்டிருக்கிறது (ஐ-10)

### ஓமந்தையில் 13 புலிகள் உயிரிழப்பு?

கொழும்பு,நவ.9

நேற்றுமுன்தினம் மாலை வவுனியாவுக்கு வடகிழக்கே ஓமந்தைப் பகுதியில் இரு அணிகளாகப் பதுங்கியிருந்த படையினர் சுமார் அறுபது முதல் எண்பது விடுதலைப் புலிகளைக் கொண்ட அணி ஒன்றின மீது நடத்திய தாக்குதலில் 13 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.

விசேட ஊடகத் தகவல் மையம் இவ்வாறு அறிவித்தது.

பதுங்கியிருந்த முதல் படையணியின் தாக்குதலுக்கு இலக்காகி புலிகள் சிதறி ஓடிப் பின்வாங்கிய போது அருகில் பதுங்கியிருந்த மற்றைய அணி தாக்குதலை நடத்தியதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ)

### வேட்பாளர் விலகல்

மட்டக்களப்பு,நவ.9

மட்டக்களப்பு மாவட்டத்தில் உழவு இயந்திரச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடும் சுயேட்சைக் குழு இலக்கம் ஒன்றின் வேட்பாளரான சிவராசா சிவசீலன் என்பவர் போட்டியில் இருந்து விலகிக்கொள்வதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்துள்ளார்.

இதேபோன்று பொ.ஐ. முன்னணி வேட்பாளரான குமரையா பீதாம்பரம் பிள்ளை என்பவரும் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்திருந்தது தெரிந்ததே. (ஐ-10)



ஞானசுந்தரம் ஆனந்தகுமார் அவர்களை

நாம் அனைவரும் ஒன்றிணைந்து தெரிவு செய்வோம்!

சிறுபான்மை இனம் என்ற பெயரை இல்லாதொழிப்போம்!!

டிசெம்பர் 5 ஆம் திகதி பேரினவாதிகளுக்கு சரியான பாடம் புகட்டுவோம்!!!

X 4 X

(C/19191)

# எரிபொருள் போதியளவு கையிருப்பில்; விநியோகத்துக்கு படையினர் கட்டுப்பாடு!

## யாழ்.பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்குடாநாட்டுக்குத் தேவையான எரிபொருள்கள் அனைத்தும் காங்கேசன்துறையில் போதியளவு கையிருப்பில் உள்ள போதும், அவற்றின் விநியோகத்தைப் படையினர் கட்டுப்படுத்துவதனாலேயே குடாநாட்டில் தொடர்ந்தும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. யாழ்.பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்துள்ளன.

எரிபொருள்கள் போதியளவு கையிருப்பில் உள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் கடந்த வாரம் தெரிவித்திருந்த போதிலும - எரிபொருள் நிலையங்களின் எரிபொருள்களுக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாட்டு நிலையே நீடித்து வருகின்றது.

இது தொடர்பாக யாழ்.பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்களுடன் தொடர்புகொண்டு கேட்ட போது, அந்த வட்டாரங்கள் மேற்கண்டவாறு தெரிவித்தன.

காங்கேசன்துறை களஞ்சியத்தில் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் போன்றன போதியளவு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை குடாநாட்டு எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு விநியோகிப்பதற்கு படையினர் கட்டுப்பாடு விதித்துள்ளனர். தினமும் குறித்த அளவு எரிபொருள்களையே களஞ்சியத்தில் இருந்து விநியோகிப்பதற்கு அனுமதிக்கின்றனர். அவை குடாநாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய போதுமானதாக இல்லை.

இதனாலேயே தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலை நீடிக்கின்றது என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுமக்களுக்கான எரிபொருள் விநியோகத்தை கட்டுப்படுத்துவதற்கு படையினருக்கு அதிகாரம் உண்டா என்று கேட்டபோது - இது தொடர்பாகத் தாங்கள் கொழும்பு பெற்றோலியக் கூட்டுத்தாபன விநியோக முகாமையாளருக்கு அறிவித்ததாகவும், அதற்கு 'படையினரின் ஆலோசனைப்படியே எரிபொருளை விநியோகிக்கவும்' என்று அங்கிருந்து பதிலளிக்கப்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

வெளிச் சந்தையில் எரிபொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் யாழ்.செயலக அதிகாரிகள் வாளாவிருந்து வருவதாகவும் அவ்வட்டாரங்கள் குற்றஞ்சாட்டின.

இதேவேளை -

எரிபொருள் விநியோகிப்பதில் உள்ள கட்டுப்பாட்டை நீக்குவதற்கு யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபன பிரதேச முகாமையாளர் மற்றும் வடபிராந்திய முகாமையாளர் ஆகியோர் பல தரப்புகளுடனும் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(ஐ-9-ரி)

### மீனவருக்கு வலை வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம்,நவ.9

பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்கு, மற்றும் பளை பிரதேச கடற்றொழிலாளர்களுக்கு இலவச வலை உபகரணங்கள் வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறை கடற்றொழில் அலுவலகத்தில் இடம் பெறும்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.பி.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக பட்டினிக்கெதிரான நிறுவன முகாமையாளர் ஜவான்கெற்றும், பிரதம விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, பளை பிரதேச செயலர் சி.புத்திரசிகாமணி, கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் எஸ்.ஏ.ஜோசேப் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(ஐ-ரி)

### பரிசளிப்பு விழா

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை பரிசளிப்பு விழாவும், கலை விழாவும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் பொ.கணேஸ்வரலிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(ஐ-152)

### மங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் ஒருவர் ஒரு கண்ணை இழந்துவிட்டார். தலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. பல துப்பாக்கிச் சன்னங்கள் அவரது உடலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. அவர் இன்னும் உணர்வற்ற நிலையிலேயே இருக்கின்றார். மேலும் ஐந்து இளைஞர்கள் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர்.

தாக்குதலுக்கு உபயோகிக்கப்பட்ட துப்பாக்கிகள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மெய்ப்பாதுகாவலர்களுக்கு உரியவை. அவர்கள் வந்த வாகனம் நிதிஅமைச்சுக்குரியது.

- இப்படி அவர்கள் தெரிவித்தனர்.

அமைச்சின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் -

இந்தச் சம்பவம் தொடர்பாக அமைச்சர் மங்கள சமரவீரவை கைது செய்யும்படி அக்குறஸ்ஸ நீதிவான் எந்நேரமும் உத்தரவிடக்கூடும் என்று எதிர்பார்ப்பு நேற்று அரசியல் வட்டாரங்களில் நிலவியது.

ஆனால் இத்தகைய கைது ஒன்றை தவிர்ப்பதற்காக தம்மை ஆஸ்பத்திரி ஒன்றில் சேர்த்துக் கொள்ள மங்கள சமரவீர திட்டமிடுகின்றார் என இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

நேற்றுக்காலை சர்வதேச நகர திட்டமிடல் நிகழ்ச்சியில் அமைச்சர் மங்கள சமரவீர பங்குபற்றவில்லை. "அமைச்சர் கடும் சுகவீனமுற்றுள்ளார். அவர் தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் சேர்க்கப்படவிருக்கின்றார்" - என்று அமைச்சரின் செயலாளர் தெரிவித்தார்.

# தமிழ்ச்சக்திகளின் ஒற்றுமையை உலகிற்கு உணர்த்த வாக்களியுங்கள்

## குருநகர் கூட்டத்தில் ஜீ.ஜீ.கஜேந்திரகுமார்

குருநகர்,நவ.9

தமிழ் மக்களின் போராட்டத்தை முழு உலகிற்கும் தெரியப்படுத்தும் விதத்தில் தங்கள் தியாகங்களால் அதனை வளர்த்து முன்னெடுத்தவர்கள விடுதலைப் புலிகளே. இனப்பிரச்சினைக்குத் தீவு காண்பதாயின் ஸ்ரீலங்கா



அரசு அவர்களுடன் மட்டுமே பேச வேண்டும். இதனை வலியுறுத்தவே தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு உருவானது. தமிழ் சக்திகளின் ஒற்றுமையை வெளிப்படுத்த தமிழ் மக்கள இந்தக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் ஜீ.ஜீ.கஜேந்திரகுமார்.

அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் நூறாவது பிறந்த தினத்தை ஒட்டி நேற்று மாலை குருநகரில் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் கீழ் பொதுத் தேர்தலில் போட்டியிடும் கஜேந்திரகுமார் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்மக்கள் ஒரு தனித்தேசிய இனம். தமிழனுக்கு வடக்கிலும் கிழக்கிலும் தாயகம் உண்டு. எங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. இது தான் எமது அபிலாஷை. எதிர்காலத்தில் தமிழர் பிரச்சினைக்கு காணப்படும் தீர்வு இந்த அபிலாஷைகளை நிறைவு செய்யவேண்டும்.

கடந்த 50 ஆண்டுகளாக நாங்கள் நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய பிரதிநிதிகளில் பலர் எமது பிரச்சினைகளை உலகுக்கு வெளிப்படுத்தத் தவறிவிட்டனர். இனப்பிரச்சினையின் உண்மையான அடிப்படைகளை வெளிக்கொண்டுவர அவர்களால் முடியவில்லை.

நான் கடந்த காலங்களில் வெளிநாடுகளில் தங்கியிருந்து கல்வி கற்றுள்ளேன். லண்டனில் நான் சந்தித்த அந்நாட்டுப் பிரஜைகள் பலருக்கு இலங்கையில் தமிழர்கள் எதற்காக அரசுடன் சண்டை இடுகிறார்கள் என்பது தெரிந்திருக்கவில்லை. ஆனால் நாங்கள் அரசுக்கு எதிராக யுத்தம் புரிகிறோம் என்பதை மட்டும் அவர்கள் தெரிந்து வைத்துள்ளனர்.

நாடாளுமன்ற வழிமுறைகளால் சாதிக்க முடியாதவற்றை புலிகள் போராட்டத்தினால் சாதித்திருக்கின்றனர். எனவே அவர்களுக்குரிய அந்தஸ்தை நாங்கள் கொடுக்க வேண்டும்.

#### முந்திய தவறை இனியும் செய்வதா?

சமாதானம்.... சமாதானம் என்று கூறிக்கொண்டே சந்திரிகா அரசு கடந்த ஐந்து வருடங்களாக எம்மை ஏமாற்றி, தனது ஆட்சியை நடத்தியது. நாளை ரணில் அரசு அமைக்கலாம். 1994 இருந்து நாங்கள் செய்த தவறை மீண்டும் அவருக்கு ஆதரவு கொடுப்பதன் மூலம் நாங்கள் செய்யப் போகிறோமா?

இன்றைய உலகச் சூழலை நீங்கள் உணர வேண்டும். உலகில் பயங்கரவாதக் குழுக்கள் எவை என்பதையும், உரிமைகளுக்காகப் போராடம் நடத்தும் குழுக்கள் எவை என்பதையும் உலகம் இனங்காணவுள்ளது. தமிழ்த் தேசிய இனம் ஒன்று

**தேர்தல் களம் X**

பட்டு நிற்கிறது. என்பதை முழு உலகிற்கும் நாம் சொல்ல வேண்டிய தருணம் இது.

இந்த யுத்தம் எமது தேசிய விடுதலைக்கான யுத்தம்; பயங்கரவாதம் அல்ல என்பதை டிசெம்பர் 5 ஆம் திகதிய தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமாகிய உதயசூரியனுக்கு வாக்களிப்பதன் மூலம் உலகுக்கு நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும் - என்று அவர் தெரிவித்தார்.

குருநகர் கடற்கரைவீதியில் உள்ள அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் சிலைக்கு அருகே இந்த நினைவுக் கூட்டம் நடத்தப்பட்டது. தமிழர் கூட்டமைப்புச் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களான க.சிவஞானம், அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினர்.

அமரர் பொன்னம்பலத்தின் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

(ஐ-51)


## மக்கள் குறைநிவர்த்தி சேவை மத்திய மற்றும் மாகாண அமைச்சுகளின் நடமாடும் சேவை

*துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு*

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள மக்கள் குறைநிவர்த்தி சேவையில் கலந்துகொள்ள வருபவர்களின் துவிச்சக்கரவண்டிகள் பாதுகாப்பாக நிறுத்தி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்காக பிரதான வீதியில், பழைய மாநகர சபை வளவிற்கு முன்பாகவுள்ள பகுதியிலும் மத்திய கல்லூரிக்கு மேற்காக பொது நூலகத்திற்கும் மத்திய கல்லூரிக்கும் இடையிலுள்ள வீதியிலும் பாதுகாப்பாக துவிச்சக்கர வண்டிகள் நிறுத்திவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**செயலாளர்,**
**வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு.** (C/19189)


## மரண அறிவித்தல்கள்

### இராசா சச்சிதானந்தராஜா

(ஆனந்தராஜா)

வட்டு.கிழக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த இராசா சச்சிதானந்தராஜா (ஆனந்தராஜா) நேற்று (08.11.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் (நவமணி) அன்புக் கணவரும், பாஸ்கரன், கஜேந்திரன் சங்கரி ஆகியோரின் அன்புத் தந்தையும், தனுஷாவின் அன்பு மாமனாரும், ஜோதிகஜனாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2001) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு.இந்துக் கல்லூரி அருகில்,*
*சித்தன்கேணி.* (C/19190)

தகவல்:
மனைவி

### திருமதி புஷ்பாவதி ஸ்ரீசடாச்சரம்

திருமதி புஷ்பாவதி ஸ்ரீசடாச்சரம் நேற்று (08.11.2001) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீசடாச்சரத்தின் (சுங்கத் திணைக்களம்) அன்பு மனைவியும் கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பதியினரின் புதல்வியும் திருமதி லீலாவதி செல்வரட்ணம் (கனடா), திருமதி சரோஜினிதேவி பஞ்சாட்சரம் (சிங்கப்பூர்), கே.குமரேசன் (பஹ்ரைன்), கே.கேதீஸ்வரன் (Master Feeds Ltd.) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.11.2001 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் 32, பிறைஸ் அவெனியூ, தெஹிவளையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொழும்பு.* (C/19192)

தகவல்:
கே.கேதீஸ்வரன் (சகோதரன்)

# லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்கள் நேற்று தம் அலுவலகம் முன் மறியல்!

## கோரிக்கைகளை நிறைவேற்ற திங்கள் வரை காலக்கெடு

வலி.வடக்கு,நவ.9

மூன்று அம்சக் கோரிக்கையை முன்வைத்து காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்கள் நேற்று மருதனார்மடத்தில் அமைந்துள்ள அலுவலகத்தின் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு காலை 7.30 மணியளவில் அலுவலகத்துக்கு முன்பாகத் திரண்ட ஊழியர்கள், அலுவலகத்தைத் திறக்கவிடாது வாயிலை அடைத்துக் கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலையில் அலுவலகப் பொறுப்பதிகாரி அங்கு வந்து அலுவலகத்தைத் திறக்க முடியாததால் திரும்பினார்.

சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணையாத ஊழியர்கள் தாங்கள் தொடர்ந்தும் வரவுப் பதிவேட்டில் ஒப்பமிட அனுமதிக்குமாறு கோரியும் -

கடந்த ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் தங்களுக்கு வழங்க வேண்டிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குமாறு கேட்டும் -

இப்போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து அலுவலகச் செயற்பாடுகளை முற்றாக ஸ்தம்பிக்கச் செய்ய ஊழியர்கள் திட்டமிட்டு இருந்தனர்.

எனினும் நேற்று சுன்னாகம் பொலீஸார் தலையிட்டுக் கேட்டுக்கொண்டதுக்கு இணங்க, நிறுவனத் தலைவரிடமிருந்து சாதகமான பதிலை கிளை முகாமையாளர் பெற்றுத் தருவதற்குச் சந்தர்ப்பம் அளிக்க ஊழியர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

தாம் நடத்தும் போராட்டத்துக்கு இடையூறு அற்ற விதத்தில் எதிர் வரும் திங்கட்கிழமை வரை அலுவலகத்தைத் திறக்கவும், அங்கு கடமைகளை மேற்கொள்ளவும் ஊழியர்கள் தரப்பில் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

சாதகமான பதில் தமக்கு கிடைக்காது விடின், 12 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீண்டும் தமது விட்டுக் கொடுப்புகளை விலக்கி, மறியற் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடப்போவதாக தொழிற்சங்கத் தலைவர் பொ.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் க.முத்துலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி பிரமுகர்கள் உட்பட அரசியல் கட்சிப் பிரமுகர்கள் பலரும் நேற்று மருதனார் மடத்துக்கு வந்து ஊழியர்களுடனும் முகாமையாளருடனும் கலந்துரையாடினர்.

(ஐ-4-86-152)




சர்ச்சைக்குரிய சவூதி கோடீஸ்வரரான ஒஸாமா பின்லேடன் பற்றிய நூல்கள் உலகெங்கும் பரபரப்பாக விற்பனையாகி வருகின்றன. செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவின் உலக வர்த்தக மையம் மற்றும் பென்ரகன் மீது நடத்தப்பட்ட வான் வழித் தற்கொலைத் தாக்குதல் திட்டத்தை வகுத்தவர் என்று கூறப்படும் பின்லேடனின் அட்டைப் படத்துடன் கூடிய புத்தகம் ஒன்றை இந்தியாவின் கல்கத்தா நகரில் புத்தக வியாபாரி ஒருவர் படித்துக் கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம். ஒஸாமா பற்றிய நூல்கள் இந்த நகரில் அமோக விற்பனை கண்டிருக்கின்றன.

## பெரியம்மைக்கான மருந்து தயாரிக்க இந்தியா திட்டம்

பயங்கர நோய்களை உருவாக்கக்கூடிய கிருமிகளை தீவிரவாதிகள் தமது ஆயுதமாகப் பயன்படுத்தி வருவதாகக் கருதப்படுவதை அடுதது பெரியம்மை நோய்க்கான தடுப்பு மருந்தை மீண்டும் உற்பத்தி செய்வதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது.

இஸ்லாமியத் தீவிரவாதிகளிடம் இருந்து இத்தகைய இரசாயன ஆயுதத் தாக்குதல்களை இந்தியா எதிர்நோக்குவதால் இந்தமுடிவு எடுக்கப்பட்டதாக இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் சி.வி.தாகூர் தெரிவித்தார்.

இந்தியாவில் பெரியம்மை நோய் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டதனால் அதற்கான தடுப்பு மருந்துகளைத் தயாரிப்பதைப் பல ஆண்டுகளுக்கு முன்பே இந்தியா நிறுத்தியிருந்தது. (ம-4)

# பிலிப்பைன்ஸில் சூறாவளி தாக்கி 60பேர் உயிரிழப்பு!

மணிலா,நவ.9

பிலிப்பைன்ஸின் மத்திய மற்றும் தென்பகுதிகளில் வீசிய கடும் சூறாவளி காரணமாக 60இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்; மேலும் 60இற்கும் கூடுதலானவர்கள் காணாமற்போயுள்ளனர்.

நாட்டின் புகழ்பெற்ற சுற்றுலாத் துறை மையமான ஹாமிகுயின் மற்றும் மின்டானோ தீவு ஆகிய இடங்களே சூறாவளியால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த சூறாவளி தற்போது நாட்டின் மேற்குப் பகுதியில் இருந்து வடமேற்குத் திசைகளுக்கு நகர்ந்து வருகின்றது.

மணிக்கு 90 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய புயல் காரணமாகப் பலர் தூக்கி வீசப்பட்டும் மரங்களில் மோதுண்டுமே உயிரிழந்தனர் என நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சூறாவழி காரணமாக தொலைபேசி இணைப்புக்கள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிட்டதாகவும் -

பாதிக்கப்பட்ட இடங்களுடனான போக்குவரத்துத் தொடர்புகளும் மோசமடைந்திருப்பதாகவும் - அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிழக்குப்புற நகரொன்றில் 51 சடலங்கள் கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

சூறாவளியினால் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியான மழையும் பெய்துவருகிறது இதன்காரணமாக பலநூற்றுக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் உணவு மற்றும் குடிதண்ணீர் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர் என்றும் -

இவர்களுக்கான உதவிப் பொருள்களை ஹெலிகளில் கொண்டுசென்று வழங்குவதற்கு காலநிலை இடமளிக்கவில்லை என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

பிலிப்பைன்ஸில் இந்த வருடத்தில் வீசிய 14 ஆவது சூறாவளி இதுவாகும். வழமையாக அந்த நாட்டில் வருடம் ஒன்றுக்கு 20 சூறாவளிகள் வீசும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## தேர்தல் தோல்விக்கு தார்மீகப் பொறுப்பேற்று

# கட்சித் தலைமைப் பதவியிலிருந்து தென்கொரியப் பிரதமர் இராஜினாமா

திரிபோலி,நவ.9

தென்கொரியப் பிரதமர் கிம் டே ஜுங் தனது கட்சித் தலைமைப் பதிவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

கடந்த மாதம் இடம்பெற்ற நாடாளுமன்ற இடைத் தேர்தலில் கட்சி அடைந்த படுதோல்விக்குப் பொறுப்பேற்று ஆளும் மிலேனிய ஜனநாயகக் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து அவர் விலகியுள்ளார்.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள பிரதமர் தேர்தலுக்கு கட்சியைத் தயார்ப்படுத்தும் விதத்திலேயே அவர் பதவி விலகியதாகத் தெரிவிக்கப்பட்டது.


"கட்சியின் ஐக்கியத்தைக் கட்டியெழுப்பவும் அதன் எதிர்கால நலன்களைக் கருத்திற்கொண்டும் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஏற்பட்ட தோல்விக்கு முழுப்பொறுப்பும் ஏற்று கட்சித் தலைமைப் பதவியில் இருந்து நான் இராஜினாமாச் செய்கின்றேன்" - என்று கிம் டே ஜுங் தெரிவித்தார்.

கடந்த மாதம் மூன்று ஆசனங்களுக்கு இடம்பெற்ற நாடாளுமன்ற இடைத் தேர்தலில் ஆளுங்கட்சி அனைத்து இடங்களிலும் தோல்வி அடைந்தது. இதனால் இன்னும் ஒரே ஒரு ஆசனத்தைப் பெற்றால் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று விடலாம் என்ற நிலையை எதிர்க்கட்சி அடைந்துள்ளது.

இதனால், அடுத்து வரவுள்ள பிரதமர் தேர்தல் குறித்து ஆளுங் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கவலை கொண்டிருந்தனர். இதனையடுத்தே தலைமைப் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கிம் டே ஜுங்குக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுவந்தது.

முன்னதாக, பொதுத்தேர்தலில் ஏற்பட்ட தோல்வியினால் ஏற்பட்ட அழுத்தங்கள் காரணமாக கட்சியின் கொள்கைப்பரப்பு பிரதம செயலாளர் பார்க் ஜீ.வொன் தனது பதவியை இராஜினாமாச் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# தஜிகிஸ்தானில் தளம் அமைக்க அமெ. முயற்சி



டுஷான்பி,நவ.9

ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் தொடர்வதற்கு வசதியாகவும்-

ஆப்கானிஸ்தானுக்குள் தரைப்படை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான பின்னணித் தளம் ஒன்றை ஏற்படுத்துவதற்காகவும் -

தஜிகிஸ்தானில் தனது விமானப் படைத்தளம் ஒன்றை அமைப்பதற்கு அமெரிக்கா முயன்றுவருகின்றது.

தஜிகிஸ்தான் எமோமல் ரஹ்மோனோ அமெரிக்காவின் இந்தத் திட்டத்தை உறுதிப்படுத்தினார். "தமக்குத் தேவையான விதத்தில் தளமமைக்கப் போதுமானது எனக் கருதும் மூன்று இடங்களை அமெரிக்கா மதிப்பிட்டுள்ளது. இவற்றில் ஒன்றிரண்டு தளங்கள் ஏற்கனவே அமெரிக்கப் படைகளின் பாவனையில் உள்ளன" - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் தரைவழி எல்லையில் உள்ள அமெரிக்க சார்பு நாடு தஜிகிஸ்தான், ஆப்கானிஸ்தானுக்குள் தரை நடவடிக்கைகளை ஆரம்பிக்க அமெரிக்காவுக்கு உறுதியான பின்னணித்தளம் ஒன்று தேவைப்படுகின்றது. அத்தகைய தளம் ஒன்றையே தஜிகிஸ்தானில் அமைக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. (ம)

# இந்தியப் பிரதமர் அமெரிக்காவில்!

## நாளை புஷ்ஷுடன் பேச்சு

வாஷிங்ரன்,நவ.9

மூன்று நாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய், தனது விஜயத்தின் இரண்டாம் கட்டமாக அமெரிக்கா வந்து சேர்ந்தார்.



ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் இருந்து புறப்பட்ட அவர் நேற்று அதிகாலை வாஷிங்ரன் விமானநிலையத்தில் வந்திறங்கினார்.

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள், அதற்கு பாகிஸ்தானின் ஆதரவை அமெரிக்கா அதிகளவில் சார்ந்துநிற்பது ஆகியவற்றின் பின்னணியில் வாஜ்பாயின் அமெரிக்க விஜயம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

நான்குநாள் விஜயமாக அமெரிக்கா வந்துள்ள வாஜ்பாய், நேற்று இந்திய ஆதரவு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபைத் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நாளை அவர் நியூயோர்க்கிற்கு அமெரிக்க அதிபருடன் சென்று அங்கு அவருடன் பேச்சு நடத்துவார்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்டுவரும் தாக்குதல்கள், அதனால் அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகியவற்றுக்குத் தீவிரவாதிகளால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் என்பன குறித்தும் -

இந்தத் தாக்குதலுக்குப் பாகிஸ்தானின் உதவியை அதிகளவில் அமெரிக்கா நாடிவருவது,- அதனால் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்ட பாதிப்பு என்பன குறித்தும் -

இந்தச் சந்திப்பின்போது இரு தலைவர்களும் முக்கியமாக ஆராய்வார்கள். (ம-4)

# மொஸ்கோ பல்கலைக்கழகம் வாஜ்பாய்க்கு கௌரவப் பட்டம்

மொஸ்கோ,நவ.9

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு, ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் உள்ள பல்கலைக் கழகம் ஒன்று கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

அந்தப் பட்டத்தை ஏற்றுக்கொள்வது என்று வாஜ்பாய் தீர்மானித்துள்ளார்.

பல்கலைக் கழகங்களின் கௌரவத்தைக் கருதி இத்தகைய பட்டங்களை அரசியல்வாதிகள் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்ற கருத்தை இதுநாள்வரை வலியுறுத்தி வந்தவர் வாஜ்பாய்.

தற்போது, தனது இந்த முடிவை வாஜ்பாய் மாற்றிக்கொண்டு, ரஷ்யப் பல்கலைக் கழகத்தை மதிக்கும் வகையில் அது வழங்கும் பட்டத்தை ஏற்றுக்கொள்ள வாஜ்பாய் முடிவு செய்துள்ளார்.

மொஸ்கோவில் ரஷ்ய அரச வட்டாரங்கள் நேற்று இத்தகவல்களை வெளியிட்டன. (ம)

# பின்லேடனுக்கு நிதிஉதவி செல்வதை அமெ.தடுத்தது!

## பணம் வழங்கும் அமைப்புகளின் சொத்துகள் முடக்கம்



மூடப்பட்ட அல் - பரகாற் அலுவலகங்களில் ஒன்று

நியூயோர்க்,நவ.9

அமெரிக்காவில் கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற, தற்கொலைத் தாக்குதல்களுடன் தொடர்புடையவரென அமெரிக்காவினால் குற்றஞ்சாட்டப்படும் ஒஸாமா பின்லேடனுக்கும் அவரது அல்கெய்டா அமைப்பிற்கும் நிதி கிடைக்கும் வழிகளைத் தடைசெய்யும் நடவடிக்கையில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக -

ஒஸாமா பின்லேடனின் அல் கெய்டா அமைப்புக்கு நிதியுதவி வழங்கிவரும் அமைப்புக்களென அமெரிக்கா கூறும் அல் - டாக்குவா, அல் - பரகாற் ஆகிய அமைப்புகளின் சொத்துக்கள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளன.

உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்க நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த அமைப்புகளின் சொத்துக்கள் முடக்கப்பட்டதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் வில்லியம் புஷ் தெரிவித்தார்.

கடந்த செப்ரெம்பர் 11ஆம் திகதி நியூயோர்க்கிலும், வாஷிங்ரனிலும் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்குப் பொறுப்பான அல் கெய்டா அமைப்புக்கு நிதிதிரட்டும் நடவடிக்கைகளில் இந்த இரு அமைப்புகளும் ஈடுபட்டன.

அமெரிக்காவில் ஒஸாமா பின்லேடனின் 'லைசென்ஸ்' இல்லா வங்கிகளாக இவை செயற்பட்டு வந்தன - என்றும் புஷ் கூறினார்.

இந்த இரு அமைப்புகளுடனும் தொடர்புடைய 62 குழுக்களுக்கும் மக்களுக்கும் வழங்கப்படும் நிதியுதவிகள் அனைத்தையும் அமெரிக்க அரசு தடுத்துநிறுத்தும் எனக் கூறிய புஷ் நான்கு மாநிலங்களில் இருந்த இந்த அமைப்புகளின் அலுவலகங்கள் மூடப்பட்டுவிட்டதாகவும் சொன்னார்.



இதேவேளை -

அல் பரகாற் அமைப்புக்கு சவூதி அரேபியாவில் இருந்த சொத்துக்களையும் அந்த நாட்டு அரசு பறிமுதல் செய்துள்ளது. செப்ரெம்பர் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் என அமெரிக்கா சந்தேகிக்கும் 8 பேரின் வங்கிக் கணக்குகளை இத்தாலியும் முடக்கியுள்ளது.

"தலிபான்களுக்கும் அல்-கெய்டா அமைப்புக்கும் சொந்தமான 2 கோடி 40 லட்சம் டொலர் நிதியை அமெரிக்கா முடக்கியுள்ளது; இவற்றுக்கு மேலதிகமாக இந்த அமைப்புகளுக்கு, உலகம் முழுவதிலும் 4 கோடி 30 லட்சம் டொலர் பெறுமதியான சொத்துக்கள் உள்ளன."

- என்று அமெரிக்க வருமான வரித்துறைச் செயலர் புல் ஓ நீல் தெரிவித்தார். (ம-4)

# துயர் பகிர்கின்றோம்

## புவிராசா ஸ்ரீசந்திரராசா

எமது பாடசாலை ஆசிரியர் பு. ஸ்ரீசந்திரராசா அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் பாடசாலைச் சமூகமும் பங்குகொள்கின்றது.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ உரும்பிராய்
சைவத்தமிழ் வித்தியாலயம்.
உரும்பிராய். (94353)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி விநாயகமூர்த்தி சிரோமாணிக்கம்

சவனாய், புலோலிகிழக்கைச் சேர்ந்த விநாயகமூர்த்தி சிரோமாணிக்கம் நேற்று 8 - 11 - 2001 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், ச. ஜெயலக்சுமி, வி. பாலசுப்பிரமணியம் (விவசாய போதனாசிரியர், புலோலி), திருமதி க. ஜெயராணி ஆகியோரின் அருமைத் தாயாரும். ச. சமரசிங்கம் (ஓய்வு பெற்ற பணியாளர், தேயிலை ஆராய்ச்சி நிலையம்). திருமதி பா. கலைமகள், காலஞ்சென்ற மு. கண்ணன் (வர்த்தக வங்கி, யாழ்.) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 9-11-2001 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோரியடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. பாலசுப்பிரமணியம்
(மகன்)
சவனாய்,
புலோலி கிழக்கு,
புலோலி. (சி/19183)

## இரத்தினம்மா முத்துக்குமாரு

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம்மா முத்துக்குமாரு 7-11-2001 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சின்னையா முத்துக்குமாருவின் அன்பு மனைவியும் லட்சுமிகாந்தன் (நுன்னாலை), கிருஷ்ண தேவி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆனசூயா ஆனந்தராஜா (கொழும்பு), பராசத்தி தர்மராஜா (கனடா), ராகவன் (கனடா), சக்கராயுதன் (கனடா), முரளீதரன் (கனடா), தேவகி (வன்கூவர்), கோமதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும். மகேஸ்வரி (ஆசிரியை, புலோலி எம். எம்.) த. ஆனந்தராஜா (மகாராஜா கொம்பனி), தர்மராஜா (கனடா), ஞானமலர் (கனடா), ஸ்ரீன்வரி (கனடா), ஜெயராணி (கனடா), ரஞ்சன் (வன்கூவர்), சந்திரமோகன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும். ஆருரன், அபிராமி, அருணன், கேசவன், அச்சுதன், ரோமிகா, திவசன், சர்வஜன், சிவானுஜா, விஷ்ணுகா, கௌமாரன், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (11-11-2001) 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: -
முத்துக்குமாரு
(கணவர்)
பழைய தபால் கந்தோர் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (94354)

## கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

(ஓய்வு பெற்ற உள்ளூராட்சி அரச திணைக்கள விகிதர்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட க சபாரத்தினம் அவர்கள் 7-11-2001 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கயிலம் கணபதிப்பிள்ளையின் மகனும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, செல்லம்மாவின் மருமகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், சிவகுமார் (கொழும்பு), தேவகுமார் (லண்டன்), உதயகுமார் (கனடா), பிறேம்குமார் (லண்டன்), சத்தியகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், வளர்மதி. பாமதி, பிரபாகரி, ரேணுகா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஐயாத்துரை (கூட்டுறவு பரிசோதகர்) மற்றும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, நாகமுத்து ஆகியோரின் சகோதரரும், சிறிதரன். மனோகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (9-11-2001) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 4.30 மணிக்கு வதிரி ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்;-
ஐ. சிவநாதன் (மருதம்)
பெறாமகன்
'பயறி'
நெ. ம. ம. வி. வீதி,
நெல்லியடி. (19185)

காணாமற்போனோரின் பாதுகாவலர்கள்

# யாழ்.முனியப்பர் ஆலயப் பகுதியில் நாளை உண்ணாவிரதப் போர்!

## ஆதரவு தருமாறு பொது அமைப்புகளிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 9

குடாநாட்டில் கைது செய்யப்பட்டு பின் காணாமற்போனவர்களது நிலை, அது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின் பெறுபேறு என்பன குறித்த விவரங்களை வெளிப்படுத்துவதை அரசு தொடர்ந்தும் இழுத்தடித்து வருவதையடுத்து திட்டமிட்டபடி நாளை சனிக்கிழமை யாழ். முனியப்பர் ஆலயப் பகுதியில் உண்ணாவிரதம் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் மேற்கொண்டுவருகின்றது.

இந்த உண்ணாவிரத நிகழ்விற்கு 47 அமைப்புகளைக் கொண்ட யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஆதரவைப் பாதுகாவலர் சங்கம் கோரியுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் அன்னையர் முன்னணி ஆகியன இப்போராட்டத்துக்குத் தமது பூரண ஆதரவை தெரிவித்துள்ளன.

இப்போராட்டத்திற்குத் தாம் சகல தரப்புகளிடமிருந்தும் போதிய ஆதரவை வேண்டி நிற்பதாகவும்—

கூட்டாகச் சேர்ந்து தமது கோரிக்கைகளை முன் வைப்பதன் மூலம் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறும் மக்கள் குறை நிவர்த்தி சேவையின்போது அதில் பங்குபற்ற வருகைதரவுள்ள அரச அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்க முடியும் என்றும்—

சங்க வட்டாரங்கள் மேலும்தெரிவித்தன. [ஐ 9-ரி]

# விடைத்தாள் மதிப்பிடும் பணி நடைபெறாது

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் நேற்று நடைபெற்ற தரம் 9க்கான ஆண்டிறுதிப் பொதுப்பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடும் பணி இன்று நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற தமிழ் மற்றும் சமூகக்கல்வியும் வரலாறும் ஆகிய பாடங்களின் விடைத்தாள்களை மதிப்பிடும் பணி இன்று நடைபெறமாட்டாது எனவும் —

ஏனைய பாடங்களுக்கான விடைத்தாள்களை மதிப்பிடும் பணி முன்பு குறிப்பிட்டதுபோல உரிய இடங்களில் நடைபெறும் என்றும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

மேற்குறிப்பிடப்பட்ட இரு பாடங்களின் விடைத்தாள்களையும் மதிப்பிடும் பணிக்கு ஒழுங்கு செய்யப்பட்ட சகல ஆசிரியர்களையும் இன்று தமது பாடசாலைகளுக்குச் செல்லுமாறு அவர் கேட்டுள்ளார். (ஐ-10)

# பரீட்சை நிலையம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 9

நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள கூட்டுறவுப் பரிசோதகர் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்ட யாழ். இந்துக்கல்லூரி பரீட்சை நிலையம் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலயம் அறிவித்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரியில் அமையவிருந்த பரீட்சை நிலையம் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டது. தற்போது யாழ். இந்துக் கல்லூரி பரீட்சை நிலையமும் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி அட்டையில் யாழ். இந்துக் கல்லூரி பரீட்சை நிலையம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் யாழ். இந்து மகளிர் கல்லூரி பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி)

# ஊர்காவற்றுறை நகருக்கு இன்று முதல் மின் விநியோகம்

கடந்த 12 வருடங்களுக்குப் பின்னர் ஊர்காவற்றுறை நகருக்கான மின் விநியோகம் இன்று காலை 10 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும்.

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கே. வி. குகேந்திரன், எஸ். சிவதாசன் மற்றும் மின் இணைப்பு பொறியியலாளர் எஸ். முத்துரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், வேலணை பிரதேச செயலர் செ. இரத்தினம், வேலணை பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரமூர்த்தி, நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் எ. டபிள்யு. அரியநாயகம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும்கலந்து கொள்ளவுள்ளனர். (ம-16)

## ஒளி விழா

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கிறிஸ்மஸ் ஒளி விழாவும், புலமைப்பரிசில் வழங்கும் வைபவமும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு கிறிஸ்தவ மன்றத் தலைவி எஸ். சாந்தினி தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவின் போது திருமதி கிரேஸ் பாக்கியலட்சுமி சபாபதி ஞாபகார்த்தமாக மாணவி சசி பஞ்சலிங்கத்துக்கு 10 ஆயிரம் ரூபா புலமைப்பரிசில் வழங்கப்படும். (க-173)

## திறப்பு விழா

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூடத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கல்லூரி அதிபர் ந. பரமசிவம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக கல்வித் திணைக்கள பொறியியலாளர் க. சிவபாலன், உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்) செல்வி சா. வீரசிங்கம்ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பிரதேச செயலக
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
செல்வி பூ. வனிதா அவர்களின்
அன்புத் தந்தையார்

## பொன்னையா பூவிலிங்கம்

அவர்கள் 07—11—2001 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும்
நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம்.
யாழ்ப்பாணம். [94348]


# வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு

மக்கள் குறைநிவிர்த்தி சேவை மத்திய மற்றும் மாகாண அமைச்சுகளின் நடமாடும் சேவை

## பஸ் போக்குவரத்து

யாழ்ப்பாணம் நகரத்தை நோக்கி வரும் பேருந்து சபையின் வண்டிகள் அனைத்தும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள மக்கள் குறைநிவிர்த்தி சேவையை முன்னிட்டு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி சந்தி ஊடாக மத்திய கல்லூரி மைதானம் வரை சேவையை நடத்தவுள்ளன. எனவே மக்கள் குறை நிவிர்த்தி சேவையில் கலந்துகொள்வதற்காக வரும் மக்கள் நேரடியாக மத்திய கல்லூரி மைதானம் வரை பயணம் செய்ய முடியும்.

செயலாளர்,
வடக்கின் அபிவிருத்தி,
புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
வடக்கு, கிழக்கு தமிழ் விவகாரங்கள்
அமைச்சு.
(சி/19188)

# உதயன்

## வாய்ப்பை தவற விடும் நிலை

"ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய தீர்வையே தமிழ்மக்கள் விரும்புகின்றனர். அத்தகைய தீர்வை வழங்கவேண்டிய பொறுப்பு தெற்கிலுள்ள அரசு மற்றும் சிங்கள சக்திகளையே சாரும். அத்தகைய தீர்வு ஒன்றைக் காணமுடியாதுவிட்டால் நாடு இரண்டாகப் பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாது. இந்த நிலைமை ஏற்படுவதைத் தடுக்கும் பொறுப்பும் தெற்கிலுள்ள சிங்கள சக்திகளின் கையிலேயே உள்ளது."

- இப்படிக் கூறியிருக்கின்றார் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புப் பிரமுகரும் ரெலோ அமைப்பின் முதல்வருமான என்.ஸ்ரீகாந்தா.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே தமது உரிமைகளுக்காக - தமது இனத்தின் தனித்துவத்தையும், தாயகத்தையும் பேணுவதற்காக - ஈழத்தமிழர்கள் விடுத்த கோரிக்கைகளையும் அஹிம்சை ரீதியில் நடத்திவந்த போராட்டங்களையும் சிங்களப் பேரினவாதம் உதாசீனப்படுத்தி, பலாத்காரம் மூலம் அடக்கமுற்பட்டதன் விளைவே நாட்டின் இன்றைய அவலநிலை என்பது சகலருக்கும் தெரிந்த விடயம்.

இந்த நிலையிலிருந்து முழுநாடும் மீளுவது என்றால் சிங்களப் பேரினவாதத்தின் போக்கில் நீதியான மாற்றம் ஏற்படவேண்டும். இல்லையேல் நிலைமை இன்னும் மோசமாகும். அதன் விளைவுகளுக்கு சிங்களப் பேரினவாதிகளும் தென்னிலங்கை சக்திகளுமே பொறுப்பேற்க வேண்டிவரும் என்பதையே ஸ்ரீகாந்தா தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

தேர்தலில் வெற்றிபெறுவதற்காகவும், சிங்களப் பேரினவாதிகளைத திருப்திப்படுத்துவதற்காகவும் கடந்த ஐம்பது ஆண்டு காலமாக சிங்கள அரசியல் தலைமைத்துவம் கையாண்டு வந்த அரசியல் குயுக்தித்தனமே இப்போது பெரும் போராக வெடித்து நிற்கின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் தமது அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய தீர்வை ஏற்பதற்கு இன்னும் - இவ்வளவு பேரழிவுகள், உயிரிழப்புகள், தியாகங்கள், போராட்டங்கள் ஆகியவற்றின் பின்னரும் - தமிழர்கள் தயாராக இருப்பதை ஸ்ரீகாந்தா தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

இந்த வாய்ப்பை - காலந்தப்பாது - காலந்தாழ்த்தாது - பயன்படுத்த வேண்டியது சிங்களத் தலைமைகளின் பொறுப்பும் கடப்பாடும் ஆகும்.

இப்போதைய நிலையில் -

பொதுத்தேர்தல் குறித்தும், அதில் வெற்றியீட்டுவது குறித்தும், தேர்தல் முடிவின் அடிப்படையில் உருவாகும் நாடாளுமன்ற ஆசனங்கள் பற்றிய எண்கணக்குக் குறித்துமே சிங்களப் பெரும்பான்மையினரின் கட்சிகள் சிந்தித்துக்கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு - இனப்பிரச்சினைக்கு - தீர்வு ஒன்றை முன்வைப்பது குறித்தோ, நாட்டில் அமைதியை ஏற்படுத்துவது குறித்தோ சிந்திப்பதற்கு அவர்களுக்கு விருப்பமுமில்லை; நேரமுமில்லை.

போகின்ற போக்கில் -

தமிழர்களின் உரிமைக்காகப் போராடும் சக்திகளே, தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்பது பொதுத் தேர்தல் மூலமும் உறுதிப்படுத்தப்படும் ஒரு சூழலும் -

அதையொட்டி, இராணுவ மோதல்களின் விஸ்தரிப்பும் -

ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துவருகின்றன.

அந்த நிலைமை மோசமடைந்த பின்னர், அமைதியை - சமாதானத்தை - ஏற்படுத்துவது குறித்து சிங்களத் தலைமைகள் சிந்திக்க முற்படலாம். அது 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய' கதையாகவோ அல்லது 'கண்கெட்டபின் சூரியநமஸ்காரம் செய்வது' போன்றோ ஆகிவிடலாம்.

ஒருதலைப்பட்சமாக நான்கு மாதங்கள் யுத்தத்தை நிறுத்தி, அதன்பின்னும் மேலும் இரு மாதங்கள் மோதல்களைத் தவிர்த்து, பேச்சுக்கான தமது நல்லெண்ணத்தை புலிகள் வெளிப்படுத்தியபோது, "எடுத்தேன்; கவிழ்த்தேன்" என்ற பாணியில் அதை நிராகரித்து போட்டுடைத்த அரசும், ஜனாதிபதியும், கதிர்காமரும் 'பஸ்ஸைத் தவறவிட்டு விட்டு' இப்போது பேச்சுப் பேச்சு என்று பேசுவதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகின்றோம்.

# தமிழ் மக்களின் ஐக்கியத்தை கட்டி வளர்ப்பதே நோக்கம்

## மு.கா. வேட்பாளர் கூறுகின்றார்

கொழும்பு,நவ.9

"கடந்த காலங்களில் தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய பல அரசியல்வாதிகள் நாடாளுமன்ற பிரவேசத்தை தமது அரசியல் இருப்புக்கும் சுகபோகங்களுக்கும் பிரதானமாகப் பயன்படுத்தினர்.

**தேர்தல் களம் X**

இந்த நிலைமையை மாற்றியமைத்து, தமிழ் பேசும் சமுகத்தினர் மத்தியில் ஐக்கியத்தை உருவாக்கி, அவர்களுக்கான அடிப்படைவாழ்வைக் கட்டியமைப்பதே எமது பிரதான இலக்காம்"- யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் வேட்பாளரான ஞானசுந்தரம் ஆனந்தகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் யாழ்மாவட்ட ஆதரவாளர்கள் அளித்த வரவேற்பில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

நாங்கள் அனைவரும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள். சிங்களக் கட்சிகள் தங்களது அரசியல் சுய லாபத்திற்காக எங்களைப் பிரித்துக் காட்டுகின்றன. அந்தப் பிரிவினைக்கு இடம்கொடாமல் - உங்கள் வாக்குகளை களவாடவிடாமல் -தகுதியானவர்களுக்கு வாக்கு அளியுங்கள். இது பலநூற்றாண்டுகாலமாகச் சகோதரர்களாக வாழும் எமது உறவை மீண்டும் கட்டியெழுப்ப எமக்கு உதவும். இதுவே எமது பிரதான நோக்கம்.

பொருளாதார மற்றும் பாதுகாப்பு நெருக்கடிகளிருந்து எமது மக்களை மீள்வித்து புதியதொரு வாழ்வை உருவாக்குவதற்காக நேர்மை, அர்ப்பணிப்பு, துணிச்சலுடன் செயற்படவே இந்தப் பொதுத்தேர்தல் களத்தில் குதித்துள்ளேன்.

மக்களுக்குப் பிரச்சினைகளைக் கொடுக்காமல், மோதல்களை நிறுத்தி, தேர்தல் சட்டத்திற்கு ஏற்ப மக்களை வாக்களிக்க உதவுமாறு வடக்கில் போட்டியிடும் சகல கட்சிகளையும், வேட்பாளர்களையும் கோருகின்றேன் - என்றார்.

(உ)

## நாட்டு நடப்பு

### நைற் டியூற்றி

இரவு வேலையாம் மாப்பிள்ளைக்கு
இப்பதான்ரி புறோக்கர் சொன்னான்
அரம் குறடு கத்தியோடு போனால்
அடுத்த நாளாம் வருவான் வீடு
ஆறுமாதமடி பொன் உருக்கி
ஆளைத் தேடியும் காணவில்லை
ஆறுமாதச் சிறை முடிய இன்னும்
ஐம்பது நாள் கிடக்காமடி
நூறு ரூபாய் கள்ள நோட்டு அடிப்பதிலையும்
நுண்ணறிவு படைத்தவனாம்
மாறுவேடத்தில் வந்த பொலீசு
மாப்பிள்ளை படம் வாங்கிப் போறான்.

*- விகடகவி.*

# புலிகள் தங்களுக்காகத் தாங்களே பேசுவர் வெளியாள்கள் அதற்குத் தேவையில்லை!

## தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் சீ.வீ.கே.சிவஞானம் கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,நவ.9

"விடுதலைப் புலிகள் தங்களுக்காகத் தாங்களே பேசுவர். அதற்கு வெளியிலிருந்து நாங்கள் தேவையில்லை. புலிகளுக்காகப் பேசவே தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு முனைகின்றது என்ற குற்றச்சாட்டு முற்றிலும் தவறு. புலிகளுடன்தான் பேச வேண்டும் என்ற தமிழ் மக்களின் கருத்தைப் பிரதிபலிப்பதே எமது பணி."

- இவ்வாறு தெரிவித்தார் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் யாழ்மாவட்ட வேட்பாளரும், முன்னாள் யாழ்.மாநகர ஆணையாளரும், தற்போதைய யாழ்.பல நோ.கூ.சங்கத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம்.

அளவெட்டி - மல்லாகம் பல நோ.கூ.சங்கத்தில் நேற்றுமுன்தினம்

**தேர்தல் களம் X**

நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-



நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஒரு தேர்தலுக்கான கூட்டமைபபு அல்ல. தேர்தலுக்குப் பின்னான நடவடிக்கைகளை ஒருங்கமைத்து ஒருமித்த குரலில் பேசுவதற்கே இது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உண்மையில் இந்தக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகள் சார்பில் பேசக்கூடிய ஒன்றல்ல.

விடுதலைப் புலிகளுக்கு ஒரு ஸ்திரமான அரசியல் பிரிவும் கட்டமைப்பும் உண்டு. அவர்களின் அரசியல் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் அந்தப் பிரிவே கையாளும் அவர்கள் தாங்களே தங்களுக்காகப் பேசுவார்கள். அதற்கு இன்னொரு கூட்டமைப்பு அவசியமல்ல.

இந்த நான்கு தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் பிரதான நோக்கம் விடுதலைப் புலிகள் தமிழினத்தின் விடுதலை உணர்வைப் பிரதிபலித்துப் போராடுகிறார்கள் என்பதை ஜனநாயகத் தேர்தல் மூலம் வெளிப்படுத்தி, ஆட்சிக்குவரும் அரசு விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்தத்தை அறிவித்து அவர்களுடன் நேரடியாகவோ, மூன்றாம் தரப்பு மூலமோ பேசவேண்டும் என்பதை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் வலியுறுத்தி நிற்பதேயாகும் - என்றார்.

(உ-17)

## குடாநாட்டு மக்கள் வாக்களித்து

# ஈ.பி.டி.பிக்கு முழு ஆசனங்களும் கிடைத்தால் இனப்பிரச்சினைக்கு 3 ஆண்டுகளுக்குள் தீர்வு

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம்,நவ.9

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஈ.பி.டி.பிக்கு யாழ்.குடாநாட்டில் இருந்து முழு ஆசனங்களும் கிடைக்குமாயின் இனப்பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குள் தீர்வைப்பெற்று விடலாம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா.

**தேர்தல் களம் X**

யாழ்நகரில் உள்ள தனது அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற பொதுமக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சில கட்சிகள் இப்போது கூட்டாகச் சேர்ந்திருப்பதாகக் கூறிக்கொள்கின்றன. உண்மையில் இது கூட்டு அல்ல வெறும் தேர்தல் கூத்து ஆகும்.

சிலர் இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டை ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலை என்று வர்ணிக்கின்றனர். இங்கு மக்கள் திறந்தவெளிச் சிறைச்சாலையில் இருப்பதாகக் கூறுகின்றனர். மக்கள் உண்மையில் சிறைச்சாலையில் வாழ்கின்றனரா? ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு இடத்தில் வரி வசூலிக்கும் நடைமுறை இங்கு இருக்கிறதா?



எங்களுக்கு எந்தவிதமான கபட நோக்கமும் இல்லை. மக்கள் ஆதரவையும், ஒத்துழைப்பையும் மட்டுமே எதிர்பார்க்கின்றோம். மக்களிடமிருந்து பொன்னையோ, பொருளையோ நாங்கள் எதிர்பார்க்கவும் இல்லை. மக்களின் முழு ஆதரவையே எதிர்பார்க்கிறோம்.

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பதுவே எங்கள் இலக்கு. எக்காலமும் பிரிக்கமுடியாத வடக்கு, கிழக்கு மாகாணத்தில் விசேட அதிகாரங்களுடனான சுயாட்சி என்பதே நடைமுறைக்குச் சாத்தியமான தீர்வு. இவ்வாறு வேறு எந்தக் கட்சியினராவது தமது இலக்கு அல்லது குறிக்கோள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்துகின்றனரா?

- இவ்வாறு டக்ளஸ் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய டேவிட்சன், "உச்சி முதல் உள்ளங்கால் வரை தழும்புகளைச் சுமந்து கொண்டு மக்கள் நலனுக்காகத் தொடர்ந்து சேவையாற்றும் ஒரே தலைவர், செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே" எனத் தெரிவித்தார்.

(க-7)

### உதயவாக்கு

நேற்றுச் செய்த தவறுக்கு இன்று பரிகாரம் காணமுடியாது. தவறே நிகழாமல் பார்த்துக் கொள்.

### நாளை

ஐப்பசி 24
சனிக்கிழமை
திதி : தசமி
முன்னிரவு 10.50 வரை.
நட்சத்திரம் : பூரம்
பின்னிரவு 2.50 வரை.
சுபநேரம் : 3.05 - 4.35
ராகுகாலம் : 9.05 - 10.35
(பழைய நேரப்படி)

### முதியோர் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.9

குரும்பசிட்டி நலனோம்பு நிலையம் நடத்தும் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி வை. தியாகராசா கலந்துகொள்வார்.

இதில் குரும்பசிட்டியைச் சேர்ந்த 70 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்கள் அன்பளிப்புகள் வழங்கிக் கௌரவிக்கப்படவிருக்கின்றனர்.(க-4)

## வலி.வடக்கு மக்கள் மனம் தளரக்கூடாது

# எமது பாரம்பரிய பூமியில் மீண்டும் குடியமரும் நாள் தொலைவில் இல்லை

## இணுவிலில் நடந்த கூட்டத்தில் உரை

இணுவில்,நவ.9

"அநீதியும் அக்கிரமமும் அதிக நாள் நீடித்ததாக வரலாறு இல்லை. ஆகவே, வலி. வடக்கு மக்களும் மனம்தளர்ந்துவிடக்கூடாது. எமது பாரம்பரிய பூமியில் நாம் மீண்டும் குடியமரும் நாள் வெகுதொலைவில் இல்லை என்ற மனோதிடத்துடன் செயல்படவேண்டும்."

- இவ்வாறு வலி. வடக்கு பளை, கூத்தியவத்தை சனசமூக நிலையத்தின் விசேட பொதுக்கூட்டத்திற்கு தலைமைவகித்து உரையாற்றிய நிலையத் தலைவர் எஸ்.ஆர்.ஞானசுந்தரம் கூறினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

பாரதக் கதையைப் பார்க்கும் போது அநீதியாக, நயவஞ்சகமாக துரியோதனன் 12 ஆண்டுகள் பாண்டவர்களை வனவாசம் அனுப்பினான். அதேபோல் இந்த அரசும் வலி. வடக்கு மக்களை 1990ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெயரவைத்து சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாக்கிவிட்டது. வலி.வடக்கு மக்கள் இடம் பெயர்ந்து 11 ஆண்டுகள் சென்றுவிட்டன. இன்னும் ஓராண்டு - அதாவது பாண்டவர்களுக்கு விதிக்கப்பட்டது போல் 12 வருடம் முடிய - எமக்கு விமோசனம் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

இச்சமயத்தில் தேர்தல் ஒன்று நமக்கு முன் வந்துநிற்கின்றது. இத்தேர்தலில் நான்கு தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்ததும் நல்லதொரு சகுனமாகவும், எமக்கு விமோசனம் கிடைக்கும் என்ற அறிகுறியாகவும் உள்ளது. எது எப்படி இருந்தாலும் வலி.வடக்கு மக்களின் பிரச்சனைக்குத் தீர்வு ஒன்று விரைவில் எட்டப்படவேண்டும். தவறினால் சாத்வீக வழியிலான போராட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

செயலாளர் வை.சந்திரபாலன் பேசுகையில்:-

எமது சனசமூக நிலையம் பாரம்பரியமாக சமுதாயத்திற்கும் சமயத்திற்கும் பெரும் பணியாற்றி வந்தது. சிலகாலம் இந்நிலையம் இயங்க முடியாத நிலையில் இருந்தது. சிதறி வாழும் எமது மக்களை ஒன்றுபடுத்தி, எதிர்கால சுபீட்சத்திற்கான வழிவகைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றார்.

இதனையடுத்து நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக எஸ்.ஆர்.ஞானசுந்தரமும், செயலாளராக வை.சந்திரபாலனும், பொருளாளராக வி.தவராசாவும் தெரிவாகினர்.

(க)

### கோப்பாய்ப் பகுதியில் இடம்பெற்ற

# பல திருட்டுக்கள் குறித்து பொலீஸாருக்கு முறையீடு செய்தும் நடவடிக்கை இல்லை!

## நீதிமன்றில் பலர் வாக்குமூலம்

யாழ்ப்பாணம்,நவ.9

கோப்பாய்ப் பகுதியில் இடம் பெற்ற பல திருட்டுக்கள் மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பாகக் கோப் பாய்ப் பொலீஸாருக்கு முறைப்பாடு கள் செய்யப்பட்டபோதிலும் பொலீ ஸார் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் நடை பெற்ற வழக்கு ஒன்றில் முறைப்பாட் டாளர்கள் நீதிவான் ஆர்.ரி.விக்ன ராஜா முன்னிலையில் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

கோப்பாய்ப் பகுதியில் இடம்பெற்ற பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர் புடையவர்கள் என்று சந்தேகிக்கப் படும் சந்தேகநபர்களான சின்னத் துரை சாந்தலிங்கம் அவரின் பிள்ளை களான செல்வகுமார், செல்வரூபன், செல்வமதன் மற்றும் அப்புப்பிள்ளை சின்னையா, சிறீகாந்தன் தயாளன் ஆகிய ஆறுபேரும் திருட்டு முயற்சி யில் ஈடுபட்டிருந்த சமயம் கோப் பாய்ப் பகுதி விழிப்புக்குழுவினரால் துரத்திப் பிடிக்கப்பட்டதாகத் தெரி விக்கப்பட்டது. பின்னர் அவர்கள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டி ருந்தனர்.

கடந்த 8ஆம் திகதி முதல் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இந்தச் சந்தேக நபர்களுக்கு பிணை வழங் குவது தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணைகளின் போது கோப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த மூன்று கிராமசேவையாளர்களும், ஐந்து பொது மக்களும் நீதிவான் முன்னிலையில் சாட்சியமளித்திருந்தனர். அவர்கள் வழங்கிய சாட்சியங்களிலேயே கோப பாய்ப் பொலீஸாருக்கு எதிராக மேற் படி முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து -

பொதுமக்களின் முறைப்பாடுகள் மீது பொலீஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எதிர்காலத்தில் தெரிவிக்கப்படாத முறையிலும் -

திருட்டு மற்றும் அச்சுறுத்தல் போன்ற குற்றச் செயல்களை வேரோடு அறுத்தெறிவதற்கும் பூரண விசாரணை நடத்தி இந்தச் சந்தேக நபர்கள் தவிர்ந்த வேறு யாராவது குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அவர் களையும் கைதுசெய்து நீதிமன் றில் முற்படுத்துமாறும் -

கோப்பாய்ப் பொலீஸாருக்கு நீதி வான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர்களில் 14 வயது நிரம் பிய தயாளன் என்ற சிறுவனை எதிர் வரும் 21ஆம் திகதி வரை தெல்லிப் பழையில் இயங்கும் புனர்வாழ்வு முகா முக்கு அனுப்பிவைக்குமாறும் -

வேறு வழக்குகளில் பிணை அனு மதி வழங்கப்பட்டிருந்த செல்வரூ பனுக்கும், செல்வமதனுக்கும் வழங் கப்பட்ட பிணையை ரத்துச் செய்து தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கு மாறும் -

நீதிவான் உத்தரவிட்டார்.

(உ-6-10)

### மாணவர் காப்புறுதிச் சான்றிதழ்

மாணவர்களுக்கான காப்புறுதிச் சான்றிதழ் நாளைமறுதினம் ஞாயிற் றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் வழங்கப்படவுள்ளது.

இவ்வைபவத்திற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த சகல பாட சாலை அதிபர்களையும், ஐந்தாம் தரத்திற்கு மேற்பட்ட அனைத்து வகுப்பு மாணவத் தலைவர்களையும், சகல வலயக் கல்விப் பணிப்பாளர் களையும், சகல கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் தவ றாது சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப் பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.

காப்புறுதித் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சகல மாணவர் களுக்கும் காப்புறுதிச் சான்றிதழ்கள் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச் சின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள குறைநிவிர்த்தி சேவை நிகழ்வின் போது வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. (க-118)

# விஞ்ஞான தினப் போட்டிகள் நாளை இரு நிலையங்களில்

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கம் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தும் விஞ்ஞான தினப் போட்டி களின் ஓர் அங்கமாக கட்டுரைப் போட்டி மற்றும் வினாவிடைப் போட்டிக்கான எழுத்துப் பரீட்சை ஆகியன நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு நடைபெறவுள் ளன.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள வடமராட்சி பிரதேச மாணவர்களுக்கு வட இந்துமகளிர் கல்லூரியிலும், ஏனைய பகுதி களைச் சேர்ந்த மாணவர்களுக்கு யாழ்.இந்துக் கல்லூரியிலும் போட்டி கள் நடைபெறும்.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் அந்தந்தப் பாட சாலைகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டிருப்பதாகவும் -

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத பாடசாலைகளின் பொறுப் பாசிரியர்கள் மாணவர்களை உரிய பரீட்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கலாம் எனவும் -

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் அறிவித்துள்ளது.

(க-4)

### இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேசம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

மின் மார்க்கங்களில் அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளதால், 11.11.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரையும் யாழ்ப்பாண குடாநாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

இதனால் ஏற்படும் சிரமங்களுக்காகவும் மனம் வருந்து கின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்.
சுன்னாகம்.

(C-19142)

*"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"*
*இலங்கை மின்சார சபை.*

### விண்ணக வாழ்வின்

## 31ஆம் நாள் நினைவு



மண்ணில் 15 - 09 - 1923

விண்ணில் 10 - 10 - 2001

### திருமதி மில்றெட் ரெட்ணராணி அலெக்ஸாண்டர்

அன்புதனைப் பொழிந்து அனைவரையும் அரவணைத்து
ஆறுதலைக் கொடுத்து நின்ற
அகல் விளக்கு அணைந்து போனதேனோ?
நித்திய வாழ்வில் நிடிய இன்பம் கொள்வாய்.

*118, 4ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*

(94331)

குடும்பத்தினர்.

### யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

## தரம் 6 அனுமதி

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. காரியாலயத்தில் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 30-11-2001.**

(C/19162)

*- அதிபர்.*

### உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

அபிவிருத்தி நிதிக்காக

அதன் பழைய மாணவர் சங்கத்தினர் அளிக்கும்

## "வானவில்"

## முத்தமிழ் விழா

*இடம்:* உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி திறந்த வெளியரங்கு.

*காலம்:* நாளை (2001.11.10) சனிக்கிழமை பிற்பகல் 2 மணி *(புதியநேரம்)*

*பிரதமவிருந்தினர்:* திரு.எம்.நடராஜசுந்தரம்
*(முகாமைத்துவ கல்வி வணிக பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)*

*தலைமை:* பேராசிரியர் திரு.அ.நவரட்ணராஜா
*(பழைய மாணவர் சங்கத் தலைவர்)*

**நிகழ்ச்சிகள்**

01. பழைய மாணவர் சங்கத்தினரால் நடத்தப்படும் நுண்கலை மன்றத்தினரின் பாடல், நடனங்கள்.
02. திருமதி கிருஷாந்தி ரவீந்திரா *(விரிவுரையாளர், நடனத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)* அவர்களின் நெறியாள்கையிலும் காலசூரி திரு.எம்.கே.பத்மநாதனின நாதஸ்வரத்துடனும், "நாட்டிய நாதஸ்வர சங்கமம்" - நாட்டிய விருந்து
03. யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்களின் "யுகமுற்று" நாடகம்.
04. அரியாலை தந்த நகைச்சுவை மன்னன்'சந்திரகுமார்' "கண்டறியாத கலியாணம்"வாழ்வியல் சிரிப்பு நாடகம்.

2001.07.05ஆம் திகதிய நிகழ்ச்சிக்காக வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டு இந்நிகழ்ச்சிக்குச் செல்லுபடியாகும்.

*செயலாளர்,*
*பழைய மாணவர் சங்கம்.*

(94327)

### ஊர்காவற்றுறை பிரதேச சபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் - 2002

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள பின்குறிப்பிடப்படும் சந்தைகள்/இறைச்சிக் கடைகளை 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள என்னால் கோரப்படுகின்றன.

01) . கேள்விப் பத்திரங்கள் வழங்கும் கடைசித் திகதி 19.11.2001.
02) கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி 21.11.2001 மு.ப.12.00 மணிவரை. அன்றையதினம் பி.ப. 1.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளை கேள்விகள் சமர்ப்பித்தவர்களும் சமுகமளிக்கலாம்.
03) கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
04) மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தலுக்கான அட்டவணை

| இல. குத்தகை விவரம் | கேள்விப் பத்திரப்பணம் (மீளளிக்கப்படாதவை) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக்கூடியது) | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 01 ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக் கடை இல.01 (மாதவாடகை ரூபா 150/-அறவிடப்படும்) | 150/- | 1,500/- | 75,000/- |
| 02. ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக் கடை இல.02 (மாதவாடகை ரூபா 150/- அறவிடப்படும் ) | 150/- | 1,500/- | 75,000/- |
| 03. நாரந்தனை மாட்டிறைச்சிக்கடை (கடையைத் தாங்களே அமைத்துக் கொள்ளல் வேண்டும்) | 100/- | 1,000/- | 50,000/- |
| 04. ஊர்காவற்றுறை மீன்சந்தை | 100/- | 500/- | 20,000/- |
| 05. காரைநகர் பழையகண்டி மீன்சந்தை | 200/- | 500/- | 15,000/- |
| 06. காரைநகர் வேம்படி மீன்சந்தை | 250/- | 500/- | 15,000/- |
| 07. நாரந்தனை மீன்சந்தை | 100/- | 300/- | 7,500/- |
| 08. புளியங்கூடல் மீன்சந்தை | 50/- | 100/- | 2,500/- |
| 09. அனலைதீவு மீன்சந்தை | 150/- | 500/- | 15,000/- |

குறிப்பு:- கேள்வித்தொகை, கேள்விப்பத்திரப் பணம், மாத வாடகை ஆகியவற்றுக்கு பொருள்கள், சேவைகள் மீதான வரி (ஜி.எஸ்.ரி) 12.5% செலுத்துதல் வேண்டும்.

*ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை.*
*05.11.2001*

ஒப்பம்: திரு.நா.திருச்செல்வம்,
உபதலைவர்,
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

(C/19150)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகமும்
மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகமும்
இணைந்து நடத்தும்
We Serve

## கண்பரிசோதனை முகாம்

50 வயதுக்கு மேற்பட்ட வறுமைக்கோட்டின் கீழ வழ வெண்படலம் உடையவர்களை இனங்காணுதலும், சத்திரசிகிச்சைக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதலும்.

Dr.S.குகதாசன்
(கண் சத்திர சிகிச்சை நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை)

இடம்:- வட்டு. மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலை.
நாள்:- நாளை (10/11/2001) சனிக்கிழமை.
நேரம்:- காலை 8.00 மணிதொடக்கம் 11.00 மணிவரை.

லயன Dr.S.சதாசிவம்
வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்.
(94301)

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 03 - 08 - 1926
விண்ணில் 09 - 11 - 2000

**திருமதி யோகாம்பாள் மகேஸ்வரன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*மாறாது உம் நினைவு!*
*நீங்காது எம் துயரம்!!*

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

நிரந்தர முகவரி:
"அயோத்தியா",
சரசாலை தெற்கு, சரசாலை.

தற்காலிக முகவரி:
68/2, இராசாவின் தோட்டம் வீதி,
நல்லூர்.
(94312)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 07 ☆ 03 ☆ 1932
உதிர்வு 10 ☆ 10 ☆ 2001



அமரர்
**கணபதிப்பிள்ளை துரைராஜா**
*(பிரபல வர்த்தகர், கம்பளை)*

*மண்ணுடன் வாழ்ந்து பரமனடி சேர்ந்த தெய்வமே!*
*காதமோ ஒன்றாகினும் கவலைகள் விலகவில்லை!*
*இவ்வாறு வாழ்கின்றோம்; ஆனால் வழிமைத்த*
*– நீரோ இல்லை!*

*பாசத்தை ஊட்டி பணிவுடன் வளர்த்து*
*பாரினில் புகழோங்கச் செய்தவரே!*
*உம் நினைவுகள் என்றென்றும் – எம்*
*மனதுள் அழியாத கனவுகள்!*

எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி அறிந்து உடன்வந்து எமக்கு உதவிய அன்பு உள்ளங்களுக்கும் இறுதிக் கிரயைகளில் பங்கு கொண்ட எமது உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் ஏனைய பல வழிகளிலும் எமக்கு உதவிகள் செய்தவர்களுக்கும் நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (09.11.2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- மனைவி, மக்கள், மருமக்கள்,
சி.தங்கராசா (மருமகன்),
வே.சத்தியசீலன் (மைத்துனர்),
பேரப்பிள்ளைகள்.

*31, ஆசீர்வாதப்பர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
(94267)

## வடமராட்சியில் 850 மாணவருக்கு 'கியூடெக்' சத்துணவு

யாழ்ப்பாணம்,நவ.9

வடமராட்சி கடற்பரப்பில் தொழில் செய்ய மீனவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் வறுமை நிலைமையில் வாழும் சுமார் 850 மாணவர்களுக்கு மனித முன்னேற்ற நடுநிலையம் (கியூடெக்) சத்துணவு வழங்கி வருகின்றது.

மீனவர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் அந்தப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் காலை உணவு இன்றியே பாடசாலை செல்வதாகவும் -

இதனால் அவர்களால் கல்வியைத் தொடரமுடியாமல் இருப்பதாகவும் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து மனித முன்னேற்ற நடுநிலையம் அத்தகைய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குச் சத்துணவும் பால்மாவும் வழங்கிவருகிறது.

இந்தத் திட்டம் வடமராட்சி மீனவர்களை மீண்டும் கடற்றொழில் செய்ய கடற்படையினர் அனுமதி வழங்கும் வரை நடைமுறைப்படுத்தவுள்ளதாக மனித முன்னேற்ற நடுநிலையத்தின் இயக்குநர் அருட்தந்தை சி.ஜெயக்குமார் தெரிவித்தார். (க-6)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு (ஏ.ஆர்.வி.) மருந்து ஏற்றும் பணி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

முதற்கட்டமாக வண்ணார்பண்ணைப் பகுதியில் பின்வரும் இடங்களில் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

☆ 12ஆம் திகதி திங்கள் - காலை 8.30 - 10.30 மணி வள்ளுவன் ச.ச.நிலையம்.

முற்பகல் 11 - 1 மணி காமாட்சி ச.ச.நிலையம்.

பிற்பகல் 2.30 - 4.30 மணி ஜே/97 கிராமஅலுவலர் காரியாலயம்.

☆.13ஆம் திகதி செவ்வாய் - காலை 8.30 - 10.30 மணி நீராவியடி ச.ச.நிலையம்.

முற்பகல் 11 மணி வேம்படி ச.ச. நிலையம்.

பி.ப. 2.30 - 4.30 மணி ஆத்திசூடி ச.ச.நிலையம். (ம)

## பரீட்சைகளுக்கு சமுகமளிக்க மாற்று ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.9

தொழிற்பயிற்சி அமைச்சின் போதனாசிரியர் ஆள்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சைக்கு அனுமதிப்பட்டை கிடைத்தும், பரீட்சைக்குச் சமுகமளிக்க முடியாதுபோனவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் - சம்பந்தப்பட்டவர்கள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்துக்குச் சமுகமளித்து தமது விவரங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமெனவும் - சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ம-7)

## அறநெறிப் பாடசாலை அதிபர்களுக்கு!

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் அதிபர் அல்லது பிரதிநிதிகளை இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவிலில் இயங்கும் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தரைச் சந்திக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## விசேட அ.அட்டை. கோருகின்றனர் மட்டு.வேட்பாளர்

மட்டக்களப்பு,நவ.9

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் சில வேட்பாளர்கள் தமக்கு வேட்பாளர் அடையாள அட்டைகள் வழங்குமாறு தேர்தல் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக சோதனைச் சாவடிகளுடாகச் செல்லும்போது தம்மைப் பிரத்தியேகமாக அடையாளப்படுத்துவதற்காகவே அவர்கள் தமக்கு விசேட அடையாள அட்டை வழங்குமாறு கோரியுள்ளனர்.

இதுதொடர்பாக ஆராய்ந்து வருவதாகத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-4)


## மாபெரும் மலிவு விற்பனை

மகாசில்க்ஸ் ஸ்தாபனத்தாரின்
**தீபாவளி மலிவு விற்பனை**

திருமண முகூர்த்தப் பட்டுப்புடைவைகளின்
முதற்தர விற்பனையாளர்களான
**மகா சில்க்ஸ்**

ஸ்தாபனத்தாரினால் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வெளிநாடுகளில் இருந்து விசேடமாக இறக்குமதி செய்யப்பட்ட ...... ஆடவர், மகளிர், சின்னஞ்சிறுகள் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் வேண்டிய அனைத்து ரக ஆடைவகைகளும் விசேட தள்ளுபடியில் விற்பனையாகின்றன!
உங்கள் தேர்வுக்கு முந்துங்கள்! இன்றே நாடுங்கள்

**மகா சில்க்ஸ்**
*32, 40A, நவீன சந்தை (உட்புறம்),*
*யாழ்ப்பாணம்.*

தரமான ஆடை வகைகளை உங்கள் எண்ணம் போல் பெற்றிட
எமது மற்றுமொரு ஸ்தாபனம்

**பியூட்டி சில்க்ஸ்**
*69, நவீன சந்தை (உட்புறம்),*
*யாழ்ப்பாணம்.*
(C/19115)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அபிவிருத்தி தொண்டர்களாக எம்மை நியமித்து தொழிற் பயிற்சியும் வழங்கி, மாதாந்தம் எமக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுத் தந்தமைக்காக,



வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு
அமைச்சர் மாண்புமிகு
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு.**கா.வே.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்



தென்மராட்சி
ஈ.பி.டி.பி.பிரதேச அமைப்பாளரும்,
சாவகச்சேரி நகரசபை உறுப்பினருமாகிய
உயர்திரு.
**சூசைமுத்து அலெக்ஸாண்டர் (சார்ஸ்)**
அவர்களையும்

**நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக
அபிவிருத்தித் தொண்டர்கள்,
பரிசோதகர்கள், போதனாசிரியர்கள்,
பயிற்சி நிலையம்.
(C/19153)

## முதலாம் வருட நெஞ்சகலா நினைவலைகள்

மண்ணில் 09 - 03 - 1908
விண்ணில் 05 - 11 - 2000



*ஆயிரம் பிறைகண்ட சித்தவைத்திய கலாநிதி*
**அமரர் கோ.சின்னத்தம்பி** (DAM.RIM.P)
*(ஸ்ரீ பராசக்தி அம்பாள் ஆலய அறங்காவலர், பளை, காங்கேசன்துறை.)*

திதி: 09-11-2001

பார்பரவு பராசக்தி அம்மை நிழல்
பரவி நிதம் சுகம் கண்ட அன்புத் தந்தையே!
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆத் லேன்,*
*உடுவில்.*

- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(94257)

# மக்கள் குறை நிவிர்த்தி சேவை

## மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களின் நடமாடும் சேவை

★ **வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த வைகாசி மாதம் நடைபெற்ற மக்கள் குறை நிவிர்த்தி சேவையின் போது அறிவிக்கப்பட்டதன் பிரகாரம், எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் (10.11.2001 சனிக்கிழமை, 11.11.2001 ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை மக்கள் குறை நிவிர்த்தி சேவை நடைபெறும்.**

★ **இச்சேவையின் ஊடாக தமது தேவைகளைப் பூர்த்தி செய்யவிரும்பும் அனைவரும் இச்சேவையில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.**

★ **மத்திய அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், வடக்கு - கிழக்கு மாகாண சபையின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் இச்சேவையில் பங்கேற்பதால், இவர்களுடனான உத்தியோகபூர்வ கடமைகளை துரிதப்படுத்தவும், மக்களுக்கு விரைவாக கருமமாற்றவும், வீணான தாமதங்கள் மக்களுக்கு ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்குடனும் இச் சேவையை மக்களுக்கு வழங்குவதில் எமது அமைச்சு மகிழ்ச்சி அடைகின்றது.**

### மாணவர் காப்புறுதித் திட்டம்

யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களை உட்படுத்திய 445 பாடசாலைகளைச் சேர்ந்த 158,458 மாணவர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தை அறிமுகப்படுத்தவென இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் வடக்கின் மீள் குடியேற்ற, புனரமைப்பு அதிகார சபை ஒரு மாணவனுக்கு ரூபா 25,000/= பெறுமதியான விபத்துக் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளது.

இத் திட்டத்திற்கென எந்தவொரு மாணவனும், எதுவித பணக் கொடுப்பனவும் செலுத்தத் தேவையில்லை.

இத்திட்டத்தின் விசேட அம்சங்களும், இதனால் மாணவர்களுக்குக்கிடைக்கும் பயன்பாடுகள் தொடர்பான விரிவான அறிவித்தலும் விரைவில் வெளிவரும்,

இந்நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளும்படி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள் மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட ஆசிரியர்கள், மாணவ வகுப்புத் தலைவர்கள் இத்திட்டத்தை உடன் அமுல்படுத்தும் முகமாக இதற்கென அனுப்பிவைக்கப்பட்டுள்ள படிவங்களை கோட்ட மட்டத்தில் பெற்று அவற்றைப் பூர்த்தி செய்து நடமாடும் சேவை நாள்களில் தத்தம் பாடசாலை மாணவர்களுக்கான கூட்டுக் காப்புறுதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

### பனை அபிவிருத்திச் சபை

#### தொழிலாளர் காப்புறுதித் திட்டம்

பனைசார் சீவல் தொழிலாளர்களுக்கான ரூபா 100,000/= பெறுமதியான விபத்துக் காப்புறுதித் திட்டத்திற்கு இதுவரை தங்கள் பெயர்களைப் பதிவு செய்த 2,000 க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கான கூட்டுக் காப்புறுதிப் பத்திரம் வழங்கப்படும்.

இதற்கென விண்ணப்பித்த தொழிலாளர்கள், அவர்கள் சார்ந்த சங்கங்கள் அவற்றின் பிரதிநிதிகள் இந்த நடமாடும் சேவை நடைபெறும் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில், பனை அபிவிருத்திச் சபை அலுவலகப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

தொழிலாளர்களுக்கான தனித்தனிக் காப்புறுதிப் பத்திரம் தொடர்ந்து மத்திய கல்லூரியில் இயங்கவுள்ள இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விசேட கருமபீடம் ஊடாகத் தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை விண்ணப்பிக்கத் தவறிய தொழிலாளர்கள், அவர்கள் சார்ந்த சங்கங்கள் ஊடாக இச்சேவையின்போது விண்ணப்பிக்கலாம்.

### மாணவர் புலமைப் பரிசில் திட்டம்

யாழ்.மாவட்டத்தில் யுத்த அனர்த்தம் காரணமாகத் தமது சொந்த இடங்களை விட்டு, இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவிகளுக்கான புலமைப் பரிசில் உதவித்திட்டம் நடைமுறைபடுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட மாணவ, மாணவியர் தமக்கான புலமைப் பரிசில்களை இந்த நடமாடும் சேவையின்போது பெற்றுக்கொள்ளலாம்.

### ஏனைய துறைசார் சேவைகள்

- அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களைப் பெறவும், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களைக் கையளிப்பதற்குமான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
- கடவுச் சீட்டுகளுக்கான விண்ணப்பங்களைப் பெறவும், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களைக் கையளிப்பதற்குமான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
- மோட்டார் வாகன பதிவுத் திணைக்களத்திலிருந்து மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதற்குப் பரிசோதகர் வெகுவிரைவில் வரவிருப்பதால், தாமதமின்றி பரிசோதனைகள் செய்து சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு உரிய படிவங்களைக் கையளிக்கலாம்.
- கல்வி, உயர்கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் உட்பட உயர் அதிகாரிகள் பங்குபற்ற இருப்பதால், மத்திய கல்வி அமைச்சின் ஊடான தமது பிரச்சினைகளை முன்வைக்கும்படி கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
- குவைத் நாட்டிலிருந்து இலங்கை திரும்பியவர்களுக்கான நஷ்டஈடுக் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள்.
- வடக்கு - கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளர் உட்பட மற்றும் அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் வரவிருப்பதால், இவற்றுடன் சம்பந்தப்பட்ட பொதுமக்கள், அரசஅலுவலர்கள் தமது கோரிக்கைகளை முன்வைக்கலாம்.
- யுத்த அனர்த்தங்களால், குடும்பத் தலைவர்களை இழந்தவர்கள், ஊனமுற்றவர்கள், உழைக்கும் திறனை இழந்தவர்களின் சுயதொழில் வாய்ப்புக்கான முன் உதவித் திட்டம் அறிமுகம் செய்துவைக்கப்படும்.
- மீனவர்கள் தொழில் புரியும் போது அவர்கள் எதிர்கொள்ளும் உயிராபத்துக் காரணமாக மீனவர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றை அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் அங்கம் வகிக்கும் சங்கங்கள் தத்தம் பிரதிநிதிகள் ஊடாக மீனவர்கள் தொடர்பான விவரங்களை வடக்கின் மீள் குடியேற்ற மற்றும் புனரமைப்பு அதிகார சபையின் அலுவலகப் பகுதியில் கையளிக்கவும்.
- விவசாயிகளுக்கான விசேட ஓய்வூதியத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதால், விவசாயத் தொழிலில் ஈடுபடுவோர் அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் நேரில் சமுகம்தரும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

### தென்மராட்சி மக்களுக்கு.......

பாரிய அழிவுகளைச்சந்தித்து முற்றாகச் சிதைவடைந்து போயுள்ள தென்மராட்சிப் பகுதியை மீள கட்டியெழுப்பும் பாரிய பணியினை ஆரம்பிக்கவுள்ளதால்; இப்பகுதி வாழ்மக்கள் இந் நடமாடும் சேவையின்போது வடக்கின் மீள்குடியேற்ற, புனரமைப்பு அதிகார சபையினூடாக வழங்கப்படவுள்ள விசேட இழப்பு மதிப்பீட்டுப் படிவத்தைப்பெற்று உரிய ஆவணங்களுடன் சபைக்கு விண்ணப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உதவித் திட்டங்களை முன்னெடுக்க பூரண மதிப்பீட்டின் தேவை அவசியமாதலால் பாதிப்பிற்குள்ளாகிய மக்கள் தமது பதிவுகளை விரைவாகப் பூர்த்திசெய்யும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*குறிப்பு:-*

**கல்லூரி முன்றிலில் சேவைசெய்யும் தொண்டர்களின் வழிகாட்டலைப் பெற்று சம்பந்தப்பட்ட அலுவலகப் பகுதிகளுக்குச் சென்று தத்தமக்குரிய சேவைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**செயலாளர்,**
**வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்**
**வடக்கு - கிழக்கின் தமிழ்விவகாரங்கள் அமைச்சு.**

(C/18982)

# பிரபாவுடனான எங்கள் முதல் சந்திப்பு........

**விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பால சிங்கத்தின் மனைவி அடேல், புலிகள் இயக்கத்தில் பல வருடங்கள் இருந்து நேரில் தாம் கண்டவற்றை எல்லாம் 'சுதந் திர வேட்கை' என்ற தமது ஆங்கில நூலில் சுவைபடச் சொல் கிறார்.**

**பிரபாகரன், போராளிகள், போராட்டங்கள், புலிகள் இயக்கம் பற்றி எல்லாம் கூறுகின்றார். அவர் வெளியிட்டிருக்கும் தகவல்கள் உணர்ச்சிபூர்வமானவை; உள்ளத்தைத் தொடுபவை. அவர் தமது நூலில் தெரிவித்துள்ள சில சம்பவங்கள் பற்றிய விவரம் கொழும்பிலிருந்து வெளியாகும் நமது சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி' நாளிதழில் அவ்வப்போது இடம்பெறுகின்றது. யாழ். வாசகர்களின் நன்மை கருதி அவற்றை மறுபிரசுரம் செய்கிறோம்.**

பிரபாகரனின் தோற்றம் வித்தியாசமானது. பளிங்கு போன்ற ஒளி வீசும் பிரபாகரனது இளமை ததும்பும் முகத்திலுள்ள அவரது கரிய இரு பெரிய விழிகளின் பார்வை ஊடறுத்துச் செல்லும். அந்தப் பார்வையின் ஆழம் ஒருவரது ஆத்மாவுக்குள் நுழைந்து அவரது மனதையும் சிந்தனையையும்கூடக் கண்டறியும் சக்தி வாய்ந்தது.

எங்களுக்கிடையிலிருந்த நீண்ட உறவில் பிரபாகரனின் கண்கள் பல சந்தர்ப்பங்களில் கதைகள் பல பேசியிருக்கின்றன. தொங்கவிட்ட மேல் சட்டைக்குள்ளிருந்து இடுப்பில் கட்டியிருக்கும் ஆயுதத்தின் பிடி துருத்திக்கொண்டிருப்பதை எல்லோரும் கண்டுகொள்ளமாட்டார்கள்.

இதேசமயம் பூட்டியிருக்கும் சட்டைப் பொத்தானின் உள்பக்கத்தில் அழுத்தும் பொத்தான்கள் வைககப்பட்டிருக்கும். அவசியமேற்படும் போது சட்டையைக் கிழித்தெறிந்துவிட்டு இடுப்பிலுள்ள ஆயுதத்தை எடுத்துக்கொள்ளமுடியும்.



இப்பொழுது வரலாற்று நாயகர்களாக விளங்கும் இந்த இருவரினதும் வாழ்க்கை இரண்டறக் கலந்தவையாகிவிட்டது. பாலாவின் முகத்தை பிரபாகரன் அளவிடுவதை யாரும் சுலபமாகக் காணலாம். பாலாவுடன் பேசும் சமயங்களிலெல்லாம் பிரபாகரனின் ஊடுருவிக் கண்டுபிடித்துச் செல்லும் கண்களின் பார்வை உண்மையில்லாததைச் சொல்லவோ, ஏமாற்றவோ முடியாதபடி ஒவ்வொரு வார்த்தையையும் இந்தத் துப்பறியும் கண்கள் அவதானித்துக்கொண்டிருக்கும்.

இருவரும் முதன் முதலில் சந்தித்துப் பேசியபோது அந்தக் கதை நள்ளிரவு தொடங்கி அதிகாலை வரை பல மணிநேரம் நடித்தது. தனது சொந்த வரலாற்றையும், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் பற்றிய தனது சொந்தக் கருத்தையும் பிரபாகரன் தன்னிடம் எப்படி எப்படியெல்லாம் விசாரித்துத் தெரிந்துகொண்டார் என்பதைப் பின்னர் பாலா எனக்குச் சொன்னார். பாலா எழுதிய அரசியற் கட்டுரைகளை ஏற்கனவே படித்திருந்ததுடன், பாலா தமிழாக்கம் செய்த 'சேகுவேரா', 'மாசேதுங்' ஆகியோரின் கெரில்லாப் போர்முறை பற்றிய நூல்களையும் 'தம்பி' வாசித்திருந்தார். இதுமட்டும் எங்கள் கடப்பாடு பற்றிய நம்பிக்கையை அவருக்கு ஊட்டுவதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. போராட்டத்துக்கு உண்மையான, நேர்மையான சிறிதும் சளைக்காத மனவுறுதியும், உறவும் லண்டனிலிருந்து வந்தவர்களிடம் இருக்கின்றனவா என்பதைப் பிரபாகரன் உறுதி செய்துகொள்ள விரும்பினார்.

ஆயுதப் புரட்சிப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான சித்தாந்தம், போராட்டம் பற்றிய முக்கியத்துவத்தைத் தம்பிக்குப் படியவைப்பதற்காக பாலா சில காலத்தைச் செலவிட்டார். சந்திப்புகள், பேச்சுகள் வெற்றிகரமாகத் தொடர்ந்துகொண்டிருந்தன. ஆரம்பத்திலிருந்தே ஒருவரை ஒருவர் நேசித்தனராயினும் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் ஆத்மார்த்தமாகப் புரிந்துகொண்ட தனித்துவமான நட்புறவை அடைவதற்கு பல வருடங்களாயின.

நானும் பிரபாகரனை நேசித்தேன். என்மீது அவர் வெளிப்படையாக எவ்வித சந்தேகத்தையும் காண்பிக்கவில்லை. என்னை எப்படி விழிப்பது (அழைப்பது) என்பதுதான் அவரது கவலையாயிருந்தது. தமிழ்ப் பண்பாட்டின்படி திரு., திருமதி என்று யாரையும் அழைப்பதில்லை. சமூக உயர்வு, குடும்ப உறவுகளைப் பொறுத்து முறைசொல்லி அழைப்பதுண்டு.

எங்கள் உறவு குடும்பரீதியானதாகவோ, பழக்க ரீதியானதாகவோ இல்லாததால் என்னை அவர் 'அக்கா' என்று அழைக்க முடியாதிருந்தது. என்னைத் திருமதி பாலசிங்கம் என்று சாதாரணமாக அழைக்கவும் முடியவில்லை. நான் அவரைவிட வயதில் மூத்தவளாக இருந்ததால் தனக்குச் சமமாக எனது கிறிஸ்தவப் பெயரைச் சொல்லி அழைப்பதும் பண்பாக இருக்காது.

இந்தச் சிக்கலுக்குத் 'தம்பி' சுலபமாக ஒரு வழிகண்டு 'அன்ரி' என்று என்னைப் பாசத்துடன் அழைக்கத் தொடங்கினார். பாலாவையும் மற்றும் இரண்டொருவரையும் தவிர அநேகமாக மற்றெல்லோருமே என்னை 'அன்ரி' என்றே அழைத்தனர். பெரும்பாலும் அவர்களுக்கு எனது உண்மையான பெயர் தெரிந்திருக்கவில்லை.

முதல் சந்திப்புக்குப் பின்னர் வசதியான ஒரு ஹோட்டலுக்கு நாங்கள் தங்கியிருக்கச்சென்ற பிறகு தம்பி ஒன்றிரண்டு போராளிகளுடன் ஒழுங்காக எங்களிடம் வருவார். மறுநாள் காலைவரை நீண்டநேரம் கலந்துரையாடல் நடக்கும். பாலாவுக்குச் சொல்வதற்கு தம்பியிடம் நிறைய விஷயம் இருக்கும். தம்பியுடன் விவாதிப்பதற்கும் சொல்வதற்கும் பாலாவிடமும் நிறைய இருக்கும்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் போராளிகளுக்கு பாலா அரசியல் வகுப்பு நடத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இந்த வகுப்பை ஹோட்டலில் நடத்துவதற்கு இந்த ஹோட்டல் இருக்கும் இடம் சரியானது அல்ல என்று கருதப்பட்டது. பெருமளவிலான இளைஞர்கள் இந்த வகுப்பில் கலந்துகொள்வார்கள். அவர்கள் வந்து போவது தேவையற்ற சந்தேகத்தை



ஏற்படுத்தும். இலங்கையிலிருந்து 'சதிகாரர்கள்' வந்திருப்பதாகச் சந்தேகம் ஏற்படக்கூடும்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர்கள் தங்கும் விடுதியில், செஞ்சி இராமச்சந்திரனின் விடுதியில் இந்த வகுப்பை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இறுதியில் நாங்களே ஹோட்டலைக் காலி செய்துவிட்டு செஞ்சி இராமச் சந்திரனின் சட்டமன்ற விடுதியிலேயே போய்த் தங்கியிருந்தோம்.

அந்தநேரத்தில் செஞ்சி இராமச்சந்திரன் மட்டும்தான் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உறுதியான ஆதவாளராக இருக்கவில்லை. தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி, விவசாய அமைச்சர் காளிமுத்து ஆகியோரும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாளர்களாக இருந்தனர். காளிமுத்து உதவியாக இருந்தார். நாங்கள் தமிழ்நாட்டில் இருந்தபோது அவரைச் சந்தித்தோம்.

அதிகம் நரைமுடியைக் கொண்ட, பரந்த தலையும் சைக்கிள் ஹாண்டில் போன்ற பெரிய வளைந்த மீசையுமுடைய பிரமுகரான கவிஞர் புலமைப்பித்தனும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுதிமிக்க ஆதரவாளராவார். இரண்டொரு சந்தர்ப்பங்களில் இவரது வீட்டுக்கும் நாங்கள் போயிருக்கின்றோம்.

சமூக, அரசியல், உளவியல், சித்தாந்தங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து சமகால விடுதலைப் போராட்டங்கள்,சோஷலிஸ சித்தாந்தங்கள், அரசியல் சிந்தனைகள் பற்றிய விளக்கங்கள் - விவரங்கள் என்று பாலாவின் வகுப்புகள் விரிவடைந்தன.

மேற்கத்திய சமூக ஒழுங்கு முறையை விவரிக்கும் வகுப்பு முறைக்கும் இந்தியா, இலங்கை போன்ற தெற்காசிய சமூகங்களில் உள்ள ஜாதி முறைக்கும் உள்ள வேறுபாடு பற்றிய விவரங்களை பாலா தமது வகுப்பில் எடுத்துவிளக்கினார்.

பாலாவின் அரசியல் வகுப்பில் கலந்துகொண்ட விடுதலைப் புலிப் போராளிகள் பலர் உள்ளத்தில் சோஷலிஸக் கருத்துக்களுக்கு அனுதாபம் கொண்டவர்களாக இருந்த போதிலும், இவர்களில் ஒருவர்கூட மார்க்ஸிய நிலைபற்றி உச்சரிக்கக் கூடவில்லை.

அதுமட்டுமல்ல, 'ஒருவர் கூட தோற்றத்திலும் கூட மார்க்ஸிய புரட்சிவாதிகளாகக் காணவில்லை.' ஒருத்தராவது நீளத்தாடியும் ஒழுங்கற்ற, சுத்தமற்ற குலைந்த ஆடைகளையும் அணிந்திருக்கவில்லை. இவை இளம் புரட்சிவாதிகளின் அடையாளத்துக்கு இலக்கணமாகக் கருதப்பட்டன. இதற்கு சுபி.ஆர்.எல்எவ். உதாரணம்.

*(இன்னும் வளரும்)*

---

ஆவணங்களைத் தொலைத்த

## வாகன உரிமையாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

### குறைநிவிர்த்தி சேவையில் கிடைக்கும்

யாழ்ப்பாணம்,நவ.9

ஆவணங்களைத் தொலைத்தமையால் வாகனப் பதிவுகள் மற்றும் வாகன உடைமை மாற்றம் செய்ய முடியாத வாகன உரிமையாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவுள்ளது.

இதுகுறித்து மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாளை சனிக்கிழமை முதல் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள மக்கள் குறைநிவிர்த்தி சேவையில் பங்குபற்றுவதற்கென கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள மேலதிக ஆணையாளர் மற்றும் மோட்டார் வாகனப் பரிசோதகர்கள் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

எனவே, ஆவணங்களைத் தொலைத்தமையால் பல வருடங்களாக வாகனப் பதிவுகளை மேற்கொள்ளமுடியாதிருந்த யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வாகன உரிமையாளர்கள் இந்தச் சேவையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் சந்தித்துத் தீர்வினைப் பெற்றுக் கொள்ளலாம்.

- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7-4)

## இந்து ஆலயங்கள், நிறுவனங்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்.மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்கள், இந்துசமய நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் ஆகியவற்றை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் -

சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் பதிவுக்குரிய தகுந்த ஆவணங்களுடன் யாழ்.மத்திய கல்லூரியில் நாளை சனிக்கிழமை முதல் நடைபெறும் மக்கள் குறை நிவர்த்தி சேவைக்குச் சமுகமளித்து உடனடியாகப் பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்றும் -

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலைகளுக்குரிய ஒரு தொகுதி பாடநூல்கள் மக்கள் குறைநிவிர்த்தி சேவையின்போது வழங்கப்படும் என்றும் -

அறநெறிப் பாடசாலைகளின் அதிபர்கள், தமது பகுதி கலாசார உத்தியோகத்தர்களின் சிபார்சுடன், அன்றைய தினம் தமக்குரிய புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -அவர் அறிவித்துள்ளார். (க-7)

---

திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்த

## பாணந்துறை கலைஞர் 40பேர் யாழ்ப்பாணம் வருகின்றனர்

பாணந்துறை திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்த சிங்கள மற்றும் தமிழ்க் கலைஞர்களை உள்ளடக்கிய 40 பேர் கொண்ட குழு ஒன்று எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதிவரை குடாநாட்டில் தங்கிநிற்கும் இந்தக் கலைக்குழுவினர் பல்வேறு இடங்களிலும் கலைநிகழ்வுகளை மேடையேற்றவுள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலைஞர்கள் திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் தென் பகுதிக்குச் சென்றுவந்ததைத் தொடர்ந்து தென்பகுதிக் கலைஞர்களின் இந்தவருகை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிங்கள மற்றும் தமிழ்க் கலைஞர்கள் இணைந்து மேடையேற்றவுள்ள கலைநிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள் வருமாறு:-

எதிர்வரும் 14ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கு.

16ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி.

17ஆம் திகதி காலை 9.30 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் (இரு தடவைகள்) பருத்தித்துறை வட இந்துக் கல்லூரி.

18ஆம் திகதி காலை 10 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி.(ம-6)

### பயணிகள் அசௌகரியம்

நெல்லியடி,நவ.9

பருத்தித்துறை - யாழ்.வீதியிலுள்ள கிராமக்கோட்டுச் சந்தி பஸ் தரிப்பு நிலையத்தில் மழை வெள்ளம் குளம்போல் தேங்கியுள்ளது. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியம் அடைகின்றனர். நுளம்புத் தொல்லைகளும் அதிகரித்துள்ளன. (ம-109)

---

### தீவக வலயத்தின் ஆண்டிறுதிப் பரீட்சை

தீவக கல்வி வலயத்தினால் நடத்தப்படும் ஆண்டிறுதிப் பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது. தரம் 10,11இற்கான பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 24 ஆம் திகதிவரையும், தரம் 7,8இற்கான பரீட்சை 19ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரையும், ஏனைய தரங்களுக்கான பரீட்சை 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரையும் நடைபெறும் எனத் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். (க-ரி)



**இலங்கை வங்கியினால் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட 'ரன்கினு வாசனா' சீட்டிழுப்பின் மூன்றாம் பரிசான 5 லட்சம் ரூபாவுக்கான காசோலை வழங்கும் வைபவம் பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் அண்மையில் நடைபெற்றது.**

**இந்த நிகழ்வின்போது வங்கியின் வாடிக்கையாளரான பரிசுக்குரிய பெண்மணிக்கு வங்கியின் முகாமையாளர் ஏ.ரி.ஏ.தேவராஜா காசோலையை வழங்குவதையும், உதவி முகாமையாளர் எஸ்.குகப்பிரசாதன் மற்றும் வங்கி வாடிக்கையாளர்கள் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஜ-10-173)**

# தேர்தலில் தோல்வியுற்றால் ஏற்படும் நிலைமை குறித்து ஜனாதிபதி ஆராய்வு

## 'ராவய' பத்திரிகை தகவல்

கொழும்பு,நவ.9

பொதுத் தேர்தலில் தோல்வியடைய நேரிட்டால் உருவாகக்கூடிய நிலைமைகள் மற்றும் அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பன குறித்து ஜனாதிபதியும் அவருக்கு நெருக்கமானவர்களும் ஆராய்ந்து வருவதாக 'ராவய' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

தேசிய உளவு நிறுவனத்திடமிருந்து கிடைக்கும் தகவல்கள் திருப்திகரமாக அமையவில்லை எனத தெரிகின்றது.

இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி பொதுமக்கள் ஐக்கிய முனணிக்கு 74 ஆசனங்களும், ஜே.வி.பிக்கு 12 ஆசனங்களும் கிடைக்கும் எனவும், முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தோட்டத் தொழிலாளர் சார்பான கட்சிகளுக்குக் கிடைக்கும் ஆசனங்களைவிட ஐ.தே.கட்சிக்கு 114 ஆசனங்கள் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை அடுத்துவரும் நாள்களில் இன்னும் அரசுக்குச் சாதகமற்ற போக்கினை உருவாக்கும் என்பதே தேசிய உளவு நிறுவனத்தின் கருத்தாகும்.

மிக நெருக்கமான போட்டியில் ஐ.தே.க. வெற்றிபெற்றால், பொ.ஐ.முன்னணியுடன் ஜே.வி.பியையும் இணைத்து என்ன விலை கொடுத்தாவது வேறு கட்சிகளின் ஒத்துழைப்பையும் பெற்று ஆட்சியை அமைக்கலாம்.

இருப்பினும், ஐ.தே.க. தலைமையிலான முன்னணி இலகுவாகத் தேர்தலில் வெற்றி பெற்றால் என்ன செய்யலாம் என்ற கேள்விக்கு பொ.ஐ.முன்னணியால் இன்னும் விடை காண முடியவில்லை.

ஐ.தே.க. தலைமையிலான முன்னணிக்கு இலகுவான வெற்றி கிடைக்குமானால் பொ.ஐ.மு. சார்பில் வெறறி பெறும் உறுப்பிர்களில் சிலர் ஐ.தே.கட்சியுடன் இணையக்கூடும் என்ற அச்சமும் அரச தரப்பினரிடையே நிலவுகிறது. அவ்வாறான நிலைமை உருவாகுமேயானால் ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டால் அதை எவ்வாறு எதிர்கொள்வது என்ற வினாவுக்கும் இதுவரை விடை காணப்படவில்லை.

குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையிலும் சரத் என் சில்வாவை பிரதம நீதியரசராக நியமித்ததன் நோக்கம், எப்போதாவது ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொணடுவரப்பட்டால் அதைத்தடுப்பதேயாகும்.

இருப்பினும், பிரதம நீதியரசர் எதிர்க்கட்சியுடன் தற்போது தொடர்புகளை மேற்கொண்டுள்ளதானது ஜனாதிபதிக்கு மிகவும் கவலையை அளித்துள்ளது. அத்துடன் தற்போதுள்ள நிலையில் சரத் என் சில்வாவை பதவியில் இருந்து நீக்கிவிட்டு புதிய பிரதம நீதியரசரரை நியமிப்பதும் முடியாத விடயமாகும்.

தேர்தல்கள் முடிவுற்றவுடன் நாடாளுமன்றத்தைக் கூட்டித் திடீர் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கவுள்ளதாக ஐ.தே.கட்சியின் தலைவர் தெரிவித்துள்ள அறிவிப்பில் மறைந்திருக்கும் அச்சுறுத்தல் குறித்தும் அரசு கவனஞ்செலுத்தி வருகிறது.

நாட்டின் நிதி, நிர்வாகத்தை நாடாளுமன்றமே கட்டுப்படுத்துகிறது. ஜனாதிபதிக்கு வழங்கப்படும் அனைத்து நிதி ஒதுக்கீடுகளையும் வெட்டிக் குறைத்து, ஜனாதிபதியை வலுவிழந்த ஒரு நிலைக்குத் தள்ளவும் நாடாளுமன்றத்திற்கு ஆற்றல் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

- இப்படி 'ராவய' மேலும் தெரிவித்துள்ளது. (உ)

# தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட பல வெளிநாட்டு அமைப்புகள் பின்னடிப்பு

கொழும்பு,நவ.9

பொதுத் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வருமாறு தேர்தல் ஆணையாளரால் விடுக்கப்பட்ட அழைப்பை பல வெளிநாட்டு அமைப்புகள் நிராகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நாவின் தேர்தல் கண்காணிப்புக் குழு, பொதுநல அமைப்பு நாடுகளின் தேர்தல் கண்காணிப்புக் குழு மற்றும் இந்திய தேர்தல் ஆணையகத்தின் வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்புக் குழு ஆகியனவே தேர்தல் ஆணையாளரின் அழைப்பை நிராகரித்துள்ளன என்று 'லக்பிம' பத்திரிகை தெரிவித்தது.

பொதுத் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வருமாறும், அது தொடர்பான விருப்பத்தை ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்கும்படியும், தேர்தல் ஆணையாளர் வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களுக்குத் தெரிவித்திருந்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழு மாத்திரமே தேர்தல் ஆணையாளரின் அழைப்பை ஏற்றுள்ளது. இந்தக் குழுவில் 40 தேர்தல் கண்காணிப்பாளர்கள் அடங்குகின்றனர்.

சிறிலங்கா வந்து தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட நிதி வசதி இல்லை எனவும் -

தேர்தல் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள தங்களுக்கு கால அவகாசம் போதாது எனவும் -

ஏனைய வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் தெரிவித்துள்ளதாக தேர்தல் ஆணையாளரின் வெளி நாட்டுத் தேர்தல் கண்காணிப்புப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரி ரசல் குறுப்பு தெரிவித்துள்ளார். (உ)

### இமையாணன் வாசி விடுதலை

யாழ்ப்பாணம்,நவ.9

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த உடுப்பிட்டி, இமையாணன் கிழக்கைச் சேர்ந்த கிட்டினன் மகேசன் என்பவர் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவானால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பிரகாரம் இவரை விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-117)

### குடாநாட்டுக்கான 200 தபாற் பொதிகள் திருமலையில் தேக்கம்

குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 200இற்கும் மேற்பட்ட தபாற் பொதிகள் கப்பலில எடுத்தவர போதிய இடவசதிகள் இல்லாத காரணத்தால் திருகோணமலை தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

நேற்று காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்துசேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேச குழுக் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 398 தபாற பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன என்றும் -

இதேகப்பலில் வெளியூர்த் தபால்கள் அடங்கிய 52 தபாற் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன என்றும் யாழ்.பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-6)


## சின்னஞ்சிறு விளம்பரம்

### தொலைபேசி விற்பனைக்கு

மோட்டோறோலா தொலைபேசி விறபனைக்கு உண்டு. தொடர்பு: M.சுகுணன், ஊரெழு கிழக்கு, ஊரெழு. (94309)

### ஜோதிடம்

கம்பியூட்டர் மூலம் ஜாதகங்கள் கணித்து எழுதிக் கொடுக்கப்படும். எண், கிரக பலன்களும், திருமணப் பொருத்தம் என்பன பார்க்கப்படும். தொடர்புகளுக்கு: நா.கந்தையா, மூத்த விநாயகர் கோயில் தெற்கு, ஆனைக்கோட்டை. (94038)

### ஆங்கிலக் கல்வி

அடிப்படையில் இருந்து எழுத, வாசிக்க, இலக்கணம், கடிதம், கதைக்க, வேலை பார்ப்பவர்க்கு தனிப் பிரிவு, வார இறுதி மாலை வகுப்புகள். விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (94292)

### விற்பனைக்கு

புதிய இனக் குறோட்டன், சைப்பிரஸ் பாம்ஸ் முதலியன சாடியுடனும், பையுடனும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கிறீன் பாக் வளவு, 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (94329)

VESPA - 150 ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. Dr.K.நடராஜா, மூளாய் றோட், மூளாய். (94328)

சுருக்குக் கதவுகள், தேக்கு அலுமாரிகள், முதிரைக் கட்டில்கள், சோக்கேஸ், விசிறிகள், தையல் மெசின், அயன்பெட்டி, கிறைண்டர், உரல் உட்பட வீட்டுப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. S.கனகசுந்தரம், 70, ஓட்டுமடம் வீதி, வண்ணார் பண்ணை. (94337)

### தவறிவிட்டது

"சிவபதி", உரும்பிராய் கற்பக விநாயகர் வீதி, உரும்பிராயைச் சேர்ந்த கணேசலிங்கம் கௌசிகா என்பவருடைய விஷேட.அ.அ.(இல. 0903004710), பாடசாலை அ.அ. (யா/வேம்படி மகளிர் கல்லூரி) என்பன 02.11.2001இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் அல்லது வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்கு கூ.சங்கம், நீர்வேலியில் ஒப்படைக்கவும். (94314)

நவாலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த திருநாவுக்கரசு நிமல்றாஜ் என்பவருடைய தே.அ.அட்டை (இல. 763332349V) உரும்பிராய்க்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லக்கி புடைவையகம், யாழ்.வீதி, மானிப்பாய் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். T.P: 2768. (94336)

## 6ஆம் மாத நீங்காத நினைவலைகளும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்

மண்மகிழ 23 - 02 - 1978



கண்நெகிழ 17 - 05 - 2001

### திருமதி ப.சர்மினி

திதி : 10.11.2001

மூவிரண்டு மாதங்கள் ஓடிவிட்டதே - மகளே
உன் நினைவுதான் விட்டகலவில்லையம்மா
எம் உள்ளத்தில் உனக்கோர் இடம் - என்றும்
நிச்சயம் ஒலித்துக் கொண்டேயிருக்குமம்மா!

நாளை (10.11.2001) சனிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்: திரு.திருமதி குணரத்தினம், (பனை · அபிவிருத்திச்சபை) சகோதர, சகோதரிகள்.

No: 82, சேரிகிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். (94341)

## குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோம்பு நிலையம்

### முதியோர் கௌரவிப்பு நிகழ்வு - 2001

இடம்: வயாவிளான் ம.ம.வித்தியாலய மண்டபம், உரும்பிராய்.
காலம்: 12.11.2001 திங்கள் பி.ப. 2.30 மணி.
தலைமை: திரு.ரி.வி.கிருஷ்ணசாமி அவர்கள்
பிரதமவிருந்தினர்: வைத்திய கலாநிதி வை.தியாகராசா (தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை) அவர்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:– குரம்பசிட்டியைச் சேர்ந்த 70 வயது பூர்த்தியடைந்தவர்களுக்கான தீபாவளி தின அன்பளிப்புக்கள் வழங்கப்படும். தகுதியானவர்களைக் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாக வருகைதந்து உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோம்பு நிலையம்.

(94335)

## என்றும் தமிழ் மண்ணில்



05 X

உங்கள் வாக்கு,
தமிழர் கூட்டமைப்பின்
யாழ்.மாவட்ட வேட்பாளர்
திரு.சீ.வீ.கே.சிவஞானம் அவர்களுக்கே.
(முன்னாள் மாநகரசபை ஆணையாளரும், இந்நாள் யாழ்.ப.நோ.கூ.சங்கத் தலைவரும்)
- யாழ்.ப.நோ.கூ.சங்க ஊழியர்கள்.

(C-19164)

## மரண அறிவித்தல்

### அன்ரன் செல்லத்துரை ஆனந்தராஜா

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் செல்லத்துரை ஆனந்தராஜா 04.11.2001 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் ராவன் பேர்க்கில் காலமானார்.

அன்னார் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை தம்பதிகளின் அன்பு மகனும், மாதகலைச் சேர்ந்த திரு. திருமதி பேரம்பலம் அவர்களின் அன்பு மருமகனும், சந்திரமதியின் அன்புக் கணவரும், ஸ்ரீபன்ராஜ், நிரோஜன், ராம்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லதா, லீலா, விமலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கடம்பேஸ்வரன் (சுவிஸ்), கரிகாலன், மஞ்சுளா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் (ஜேர்மன் நேரம்) ஜேர்மனியில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு.
T.P. 074 - 619274 (94338)

தகவல்:-
பே.கரிகாலன்
(மைத்துனர்)

### இந்து சமய கலாசார திணைக்களம்

# குடாநாட்டு கலைஞர் 50 பேரை கௌரவிப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 9

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் கலைசசேவையாற்றிய சுமார் 50 கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிக்கவுள்ளது.

மேற்படி கௌரவிப்பு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் சுமார் 5 கலைஞர்கள் இந்தப் பாராட்டு விழாவுக்கு முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களின் வழிகாட்டலின் கீழ் பாராட்டுப் பெறும் கலைஞர்களைத் தெரிவு செய்வர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் இத்தகைய கலைஞர் கௌரவிப்பு விழாவை நடத்துவது இதுவே முதல் தடவையாகும்.

(ம-7)

# பண்ணிசை, மனனப்போட்டிகள் இணுவில் கல்லூரி முதலிடம்

## உடுவில் கல்விக் கோட்டத்தின்

வலிகாமம் தெற்கு, நவ. 8

உடுவில் கல்விக்கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான சைவத்திருமுறை பண்ணிசை, நீதிச்செய்யுள் மனனம், தொண்டுபடும் செய்முறைப்போட்டிகள் என்பன மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றில் உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெற்றன.

75 பிரிவுகளாகநடைபெற்ற கதாப்பிரசங்கம், புராணபடனம், தொண்டுபடும் செயன்முறை, திருமுறைப் பண்ணிசை, நீதிச் செய்யுள் மனனம் போன்ற போட்டிகளில் இக்கோட்டத்தைச் சேர்ந்த சுமார் 25 பாடசாலைகள் பங்குபற்றின.

முழுப்போட்டிகளிலும்இணுவில் மத்திய கல்லூரி 26 இடங்களைப் பெற்று முதலிடத்தையும், 23இடங்களைப் பெற்று இராமநாதன் கல்லூரி இரண்டாம் இடத்தையும், 21 இடங்களைப் பெற்று கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மூன்றாம் இடத்தையும், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, இணுவில் இந்துக் கல்லூரி ஆகியவை தலா 17 இடங்களைப் பெற்று நான்காவது இடத்தையும் பெற்று முன்னணியில் திகழ்கின்றன.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி இவற்றுள் 12 முதலிடங்களையும் இணுவில் மத்திய கல்லூரி 10 முதலிடங்களையும், உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை இராமநாதன் கல்லூரி ஆகியன தலா 9 முதலிடங்களையும் பெற்றுள்ளன.

இணுவில் இந்துக் கல்லூரி, மயிலணி சைவ வித்தியாலயம் 8 இரண்டாம் இடங்களையும், இணுவில் மத்திய கல்லூரி 6 இரண்டாம் இடங்களையும், ஏழாலை சைவ மகாஜன, கந்தரோடை தமிழ்க் கந்தையா, ஸ்கந்தவரோதயா, இராமநாதன் கல்லூரி என்பன தலா 5இரண்டாம் இடங்களையும் பெற்றுக் கொண்டன.

ஏழாலை மகாவித்தியாலயம் 7 மூன்றாம் இடத்தையும், சுன்னாகம் நாகேஸ்வரி, இணுவில் மத்திய கல்லூரி, கந்தரோடை தமிழ்க் கந்தையா, ஏழாலை ஸ்ரீ முருகன், இராமநாதன் கல்லூரி என்பன தலா 6 மூன்றாம் இடங்களையும், ஏழாலை சைவ மகாஜனா 5 மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளன.

(க-152)

# புதிய வாக்காளர் பதிவுக்கான கால எல்லை மேலும் நீடிப்பு

## டிசெம்பர் 15 வரை விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். மாவட்டத் தேர்தல் அலுவலகத்தின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள பெரும் எண்ணிக்கையான வாக்காளர்கள் புதிய பதிவுகளை மேற்கொள்ள வசதியாக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதி நீடிக்கப்பட்டுள்ளது. புதிய அறிவிப்பின்படி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று தேர்தல் அலுவலகம் அறிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் 18 வயது பூர்த்தியடைந்தவர்களில் இதுவரை வாக்காளர் பதிவேட்டில் தமது பெயர்களைப் பதிவு செய்யத் தவறிய அனைவரும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரதேச கிராமசேவையாளர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் —

பெரும் எண்ணிக்கையானவர்கள் இதுவரை விண்ணப்பிக்காது இருப்பதனால் நவம்பர் 15 ஆம் திகதியுடன் முடிவடைவதாக அறிவிக்கப்பட்டிருந்த விண்ணப்ப முடிவு திகதியை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடித்திருப்பதாகவும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(க-6-180)

# புதிய சி. ஐ. டி. விசாரணைக் குழு வருகிறது

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ்ப்பாணத்தில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கென குற்றப் புலனாய்வுப் பிரிவின் ஆறாவது குழுவினர் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் சி. சந்திரசேன தலைமையில் 6 பேரைக் கொண்ட இக்குழு எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை இவ்விசாரணைகளை மேற்கொண்டு வந்த இன்ஸ்பெக்டர் வியனகே தலைமையிலான குழுவினர் நாளை மறுதினம் கொழும்புக்கு புறப்பட்டுச் செல்வர்.

(க-9-5)

### 2000ஜூனுக்கு முன் பதிவு செய்தவர்கள்

# பொதுத் தேர்தலில் வாக்களிக்க வாக்காளர் அட்டை கிடைக்கும்

## உதவி ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம் நவ. 9

கடந்த வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் 18 வயது பூர்த்தியடைந்தவர்களில் வாக்காளர் பதிவேட்டில் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ள அனைத்து வாக்காளர்களும் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிக்க முடியும்.

கடந்த வருட வாக்காளர் பதிவேடுகளின் பிரகாரமே யாழ்ப்பாணத் தேர்தல் அலுவலகத்தால் வாக்காளர் அட்டைகள் அனுப்பப்படவுள்ளதாகத் தேர்தல் அலுவலக உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் தமது பெயர்களை வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்து வரும் வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்க முடியாது என்றும் —

இவர்கள் இனிவரும் தேர்தல்களிலேயே வாக்களிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி வாக்காளர் பதிவேடுகளில் இருந்த வாக்காளர்களின் எண்ணிக்கையே நடைபெறவுள்ள தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்ற வாக்காளர்களின் எண்ணிக்கையாக (6லட்சத்து 33 ஆயிரத்து 457) அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(க-6)

# தொழில்நுட்பக் கல்லூரியில் மாணவருக்கு கற்கை நெறிகள்

## 24க்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய கல்வியாண்டுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக பாடசாலைகளைவிட்டு விலகிய மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழில்சார் கற்கை நெறிகளை கற்க ஆர்வமுடைய மாணவர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தி யாழ். தொழில்நுட்பக்கல்லூரிக்கு கிடைக்கத்தக்கவாறு அனுப்பிவைக்குமாறு கல்லூரியின் அதிபர் தெரிவித்தார்.

2002 ஆம் கல்வியாண்டில் 24 கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. 8 ஆம் வகுப்பு சித்தியடைந்த மாணவர்கள், மின் இணைத்தல் மற்றும் மோட்டார்சைக்கிள் ஸ்கூட்டர் திருத்துதல், டிராக்டர் திருத்துதல், விவசாய உபகரணங்கள் பழுதுபார்த்தல் ஆகிய கற்கை நெறிகளை கற்க முடியும்.

ஜி. சி. ஈ. சாதாரண தரம் வரை கல்வி கற்ற மாணவர்கள்; வர்த்தகமும் கைத்தொழில் தொடரும் கல்விக்கான ஆங்கில தேசய சான்றிதழ். இயந்திரவியல் தொடர்பான படம் வரையியல், சந்தைப்படுத்துதல், கணக்கீடு தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ், சுருக்கெழுத்து தட்டெழுத்து தேசிய சான்றிதழ் (ஆங்கிலம், தமிழ்), வாயு மற்றும் வில்காய்ச்சி இணைதல், இலத்திரனியல், பொருத்து பொறியியலாளர் —

கட்டடநிர்மாணத்தொழில் நுட்பத்தில் தேசிய சான்றிதழ், மோட்டார் வாகன திருத்தம், சுருக்கெழுத்தாளர் (தமிழ், ஆங்கிலம்), தொழில் நுட்பவியல் தேசியசான்றிதழில் குடிசார் எந்திரவியல், மின்னியலும் இலத்திரனியலும், பொறிமுறை எந்திரவியல், கணிய அளவை ஆகிய கற்கை நெறிகளில் தாம் விரும்பும் கற்கை நெறியைத் தெரிவுசெய்து பயில முடியும் என்றும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் தெரிவித்தார்.

(க-6)

### கொழும்பு, மலையகத்தில் நல்ல முன்னேற்றம்; ஆனால்

# குடாநாட்டில் அறநெறிப்பாடசாலைகள் வளர்ச்சி அடையாமல் இருக்கின்றன

## ஆசிரியருக்கான வதிவிடப் பயிற்சி வகுப்பில் உரை

யாழ்ப்பாணம், நவ. 9

அறநெறிப் பாடசாலைகள் தென்னிலங்கையில் வளர்ச்சியடைந்தளவுக்கு யாழ். குடாநாட்டில் வளர்ச்சியடையவில்லை. அவை வளர்த்தெடுக்கப்படவும் இல்லை.

— இவ்வாறு தெரிவித்தார் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆசிரியரும், சொற்பொழிவாளருமான ஆறு. திருமுருகன்.

யாழ். மாவட்டத்தில் உள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான மூன்று நாள் வதிவிடப் பயிற்சி வகுப்பு ஒன்று கடந்த 3 ஆம் திகதி முதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆறு. திருமுருகன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டு மாணவர்களிடையே அறநெறிக் கல்வி பற்றிய அறிவு மிகவும் குறைந்த அளவிலேயேகாணப்படுகின்றது அதேவேளை அறநெறிக் கல்விப் போதனை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்லப்படவும் இல்லை.

இந்த நிலை நீடிக்குமானால் வளரும் இளைஞர்கள், யுவதிகள் எதிர்காலத்தில் எர்தகையவர்களாக விளங்குவத் என்பதை எண்ணிப் பார்க்கவே பெரும் கவலையாகவுள்ளது.

சிறுவயதில் இருந்தே குழந்தைகள் மத்தியில் சமய அறிவை, நம்பிக்கையை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நோக்குடன் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிப் பாடசாலைகளை உருவாக்கியது. இந்தப் பாடசாலைகள் கொழும்பு, மலையகம் போன்ற பகுதிகளில் இன்று வளர்ச்சி அடைந்த நிலையில் காணப்படுகின்றன.

எனவே இத்தகைய பாடசாலைகளை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உருவாக்க வேண்டும். இந்தப் பாடசாலைகள் மூலம் சமயக் கல்வி, ஒழுக்கக்கல்வி இளைய சமூகத்தினரைச் சென்றடைய வேண்டும்.

உலகளாவியரீதியில் அறநெறிக் கல்வியைப் பரவலாக்கும் நோக்கத்துடனேயே இன்று ஆசிரியர் தினவிழா, பெற்றோர் தினவிழா என்று பல்வேறு விழாக்கள் நடத்தப்படுகின்றன. தற்போதைய சினிமாப் படங்கள் குழந்தைகள் மத்தியில் சமய நம்பிக்கைகள் பற்றிய தவறான வழிமுறைகளையே ஏற்படுத்தி விடுகின்றன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் சகல சிங்கள மாணவர்களும் பல்கலைக்கழக வளாகத்தில் வைத்து தமது பெற்றோரின் கால்களில் விழுந்து வணங்கிய பின்னரே பட்டங்களைப் பெறுகின்றனர். இந்த நடைமுறை எமது மண்ணிலும் ஏற்பட வேண்டும்.

—என்று அவர் தனதுஉரையில் தெரிவித்தார்.

(ம-7)

### புதிய நாடாளுமன்றத்தில்

# புலிகள் 25 பேரின் குரல்கள் ஒலிக்கப் போவது நிச்சயம்

## சிஹலஉறுமய தலைவர் கூறுகிறார்

எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத்தில் 25 விடுதலைப்புலிகளின் குரல்கள் ஒலிக்கப் போவது நிச்சயம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் சிஹல உறுமய கட்சித் தலைவர் திலக்கருணாரத்ன.

யானை — புலி கூட்டு என்று பிரசாரம் செய்துவரும் பொ. ஐ. முன்னணி, தேர்தலின்பின்னர் ஆட்சி அமைப்பதற்கு நான்கு தமிழ்க்கட்சிகளின் ஆதரவை நாடும் என்பதில் சந்தேகமில்லை.

ஐ. தே. கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறதா என்பது குறித்து எமக்கு எதுவும் தெரியாது.

ஆனால் ஐ. தே. கட்சியோ பொ. ஐ. முன்னணியோ ஆட்சி அமைக்க வேண்டுமானால் தமிழ்க்கட்சிகளின் ஆதரவை நாடும். இதுதான் இன்றைய நிலைமை.

— இவ்வாறு அவர்மேலும் கூறியிருக்கிறார்.

(க-4)



# பதவியிலுயர்ந்தோய் வாழ்க!

## கந்தசாமி சிவானந்தன்

(பிரதி அதிபர், ஹாட்லிக் கல்லூரி)

மாவட்ட, மாகாண, தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளில் சாதனைகள் புரிந்த உங்களது நீண்டகால அளப்பரிய ஆசிரியர் சேவையையும், தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்பட்ட கல்வி மாணிப் பயில்நெறிக்கான புகுமுகத்தேர்வில் சித்தியடைந்தமையையும், திறமை, சேவை மூப்பின் அடிப்படையில் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 தரம் Iஇற்குப் பதவியுயர்வு பெற்றமையையும் பாராட்டி மேலும் பல சிறப்புகள், உயர்வுகள் பெற இறைவனை வேண்டி உளமார வாழ்த்துகின்றோம்.

வீ.கே.கொம்மினிகேசன் ஸ்தாபனத்தார்,
துன்னாலை கிழக்கு.

(C/19179)

# காணவில்லை

26, நாவலடி லேன், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த **கணபதிப்பிள்ளை குணரட்ணம்** (வயது 69) என்பவரை கடந்த 6.11.2001 செவ்வாய்க்கிழமை இரவு 9.00 மணிமுதல் காணவில்லை. இவர் நீலநிற செக்சேட்டும், வெள்ளை வேட்டியும் அணிந்திருந்தார். இவரைப்பற்றி அறிந்தோர் மேல் குறிப்பிட்ட விலாசத்துடன் உடன் தொடர்புகொள்ளவும். (94345)


# சம்பந்தர் மருத்துவமனை

60, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

★வார்ட் (WARD) வசதிகள்
★O.P.D. (வெளிநோயாளர் சிகிச்சை)
காலை 8மணி முதல் இரவு 9 மணிவரையும்
★வைத்திய நிபுணர்கள் சேவை (Specialist Consultation)
மாலை 4 மணிக்குப்பின்
★E.C.G., NEBULIZER (ஆஸ்த்மாவுக்கு புகை பிடித்தல்)
★வார்ட்டில் தங்கும் நோயாளர்களை வைத்திய நிபுணர்கள் (Specialist) பார்வையிடுவர்.

**விசேடமாக**
★ முதியோர்கள் வைத்தியம், உணவு ஆகியவற்றுடன் கூடிய பராமரிப்பு.
★ நோய் உள்ள முதியோர்கள்.
★ நோய் அற்ற முதியோர்கள்.
இரு பாலாரும் அனுமதிக்கப்படுவர்.

மேலதிக விவரங்களுக்கு:
**SAMPANTHAR MODERN HEALTH CARE,**
NO.60, ARASADY RD,
(NEAR THADDATHERU JUNCTION)
JAFFNA.
(94346)


# பஸ்ஸில் பாய்ந்து ஏறிய மாணவனின் பற்கள் பறந்தன!

தென்மராட்சி,நவ.9

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் பஸ் நிறுத்துவதற்கு முன்னர் அவசரமாக ஏறமுயன்ற மாணவன் நான்கு பற்களை இழந்துள்ளான்.

பஸ்ஸின் நுழைவாயிலில் நின்ற படைவீரரின் துப்பாக்கியின் அடிப்பகுதி முகத்தில் இடித்ததாலேயே மாணவனின் பற்கள் பறந்தன.

நேற்றுமுன்தினம் காலை மழை பெய்து 0கொண்டிருந்தவேளையில் பஸ்ஸில் ஏறமுயன்றவேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

குடத்தனையைச் சேந்த இ.நிரோஷன் (வயது 11) என்னும் மாணவனே பற்களை இழந்தநிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

(க-117)

# குறை நிவர்த்தி சேவையில் மூக்குக்கண்ணாடிகள

வலி.வடக்கு,நவ.9

யாழ்.மத்திய கல்லூரியில் நாளை ஆரம்பமாகவுள்ள மக்கள் குறை நிவர்த்தி சேவையில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 39 பேருககு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த ஜூன் மாதம் நடைபெறவிருந்த சமூக சேவைகள் மீன்பிடி அமைச்சின் நடமாடும் செயலக சேவையில் வைத்து வழங்குவதற்கென யாழ்.செயலகத்திற்கு வடக்கு - கிழக்கு சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகளே குறை நிவர்த்தி சேவையில் விநியோகிக்கப்படவுள்ளன.

(க-86)


# BEACON

*1st in COM.*

எமது ஆசிரியர் குழு
Com. & Mgt. - பசில்
Eco. - விக்கி
Acc. - கலைச்செல்வன
Maths& Stats - தவசேகர்

ஆரம்பம்
11.11.2001 ஞாயிறு
நேரம் 8 மணி [ப.நே.] (94347)


# வாசகர் திருமுகம்

## எதிர்வரும் 20ஆம்திகதியே ஸ்கந்த ஷஷ்டி விரதம்

07-11-2001ஆம் திகதிய 'உதயன்' வாசகர் திருமுகம் பகுதியில் தி.மாணிக்கவாசகர் என்பவர் ஸ்கந்த ஷஷ்டி விரதம் எப்போது என வினா எழுப்பியிருந்தார்.

இலங்கையில் வெளிவரும் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்கள் இரண்டிலும் ஸ்கந்த ஷஷ்டி விரதம் மாறுபாடாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஸ்கந்த ஷஷ்டி என்பது உபவாசம். ஷஷ்டிக்கு ஸாயான்ன வியாப்தி அவசியம். மேலும் 12 நாழிகைக்குக் குறையாத பஞ்சமியின் சம்பந்தம் ஷஷ்டிக்கு இருக்கவேண்டும். சாயங்காலத்திலேயே சூரஸம்காரம் நடைபெற்றது என்பது வரலாறு.

இந்தவகையில் 20-11-2001 அன்று பஞ்சமியுடன் ஷஷ்டி சேர்ந்து அபரான்னம், ஸாயான்னம் முழுமையாக வியாபித்துள்ளது. எனவே அன்று ஸ்கந்த ஷஷ்டி விரதமெனக் கொள்வதே சரியானது.

ஸ்கந்த ஷஷ்டி ஆரம்பத்தை நோக்குமிடத்து இரு பஞ்சாங்கங்களின் படியும் 14-11-2001 இல் அமாவாசை சிரார்த்தம் நடைபெற்றுவிடுகிறது. எனவே 15-11-2001 ஸ்கந்த ஷஷ்டி ஆரம்பம் எனக்கொள்ளலாம்.

எனவே, இருபஞ்சாங்கங்களின்படியும் 15-11-2001இல் ஸ்கந்த ஷஷ்டி விரதத்தை ஆரம்பித்து 20-11-2001இல் ஸ்கந்த ஷஷ்டி விரதத்தை நிறைவுசெய்து கொள்வதே பொருத்தமானது. இந்தியாவிலிருந்து வெளிவரும் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்கள் பலவும் இவ்வாறு ஸ்கந்த ஷஷ்டி விரத நிர்ணயம் செய்திருப்பதை மேலும் உறுதிப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

சுழிபுரம். **த.இராசலிங்கம்.**

## விவசாயக்கடன் ரத்து; தேர்தல் கால அறிவிப்பா?

இலங்கை வங்கி மூலமாக வழங்கப்பட்ட விவசாயக்கடன் அனைத்தும ரத்துச் செய்யப்பட்டதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகி இருந்தது. அதுமட்டுமன்றி, இதுகுறித்து இலங்கை வானொலி மூலமாகவும் அறிவிக்கப்பட்டது. இந்தச் செய்திகளில் முதற்கட்டமாக 20,000 ரூபாவுக்கு உட்பட்ட கடன்களைச் செலுத்தவேண்டாம் எனக் கூறப்பட்டது.

ஆனால், தற்போது பருத்தித்துறையில் உள்ள இலங்கைவங்கிக் கிளை விவசாயக்கடன்களைக் கட்டும்படி அறிவுறுத்தியுள்ளது. எனவே இதைப்பற்றிப் புரியாமல் பல விவசாயிகள் குழம்பியுள்ளார்கள்.

இக்கடன் ரத்துச் சலுகையானது சிங்களப் பிரதேசங்களில் மட்டுமா நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது? வடக்கு - கிழக்குத் தமிழ்ப் பிரதேசங்களுக்கு இந்தச் சலுகை அமுல்படுத்தப்படவில்லையா?

பருத்தித்துறை இலங்கை வங்கிக்கு இது சம்பந்தமாக அறிக்கை கிடைக்கவில்லை என வங்கி அதிகாரிகள் கூறுகின்றனர். இந்தக் குழப்பத்திலிருந்து விடுபட சரியான பதிலை உதயன் பத்திரியை மூலம் எதிர்பார்க்கின்றோம்.

பருத்தித்துறை. **விவசாயிகள்.**

## ஒலி பெருக்கிகளைப் பாவிப்பதற்கு கட்டுப்பாடு இல்லையா?

28.10.2001ஆம் திகதிய உதயனில் "நினைக்க சிந்திக்க" என்ற பகுதியில் சண் அங்கிள் 'எங்கே வவுனியாவில் நிரந்தரமாகக் கோயிலில் ஒலிபரப்பிகளைக் கட்டியதுமாதிரி இங்கும் வந்து விடுமோ' என அச்சப்பட்டார்.

எங்கள் ஊர் வவுனியாவை விடவும் இருபடிகள் முந்திவிட்டது. எமது ஊரில் உள்ள கோயில் ஒன்றில் இரண்டு வருடங்களுக்கு முன்பே எட்டுத் திக்கும் ஒலிபெருக்கிகளை மிக உயரத்தில் கட்டித் தூக்கிவிட்டார்கள். வருடத்துக்கு இரு வாசல்களில் திருவிழா நடைபெறும். சும்மா நடைபெறாது; தடல் புடலாக, மிக ஆர்க்களமாக, காது கிழிய ஒலி பெருக்கிகள் அலற நடைபெறும்.

ஒலிபெருக்கிச் சத்தம் ஊரைவிட்டு எங்காவது ஓடவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். எங்கே போவது? ஒலிபெருக்கிகள் ஓட ஓட விட்டுக் கலைக்கின்றனவே! பக்திச் சூழல் இராது; களியாட்ட சூழல் தான் இருக்கும். சமர்க்களத்தில் இருந்து தப்பிவந்த நாம் இப்படி அமர்க்களத்தில் அகப்பட்டுக்கொண்டோமே என்றிருக்கும்.

நம் ஊரில் இன்னொரு கோயிலில் சொல்லிவைத்தாற்போல் தினமும் காலை 4.30 மணிக்கு கண்டா மணியை பல தடவை அடிக்கிறார்கள். கடவுளே! உனக்கு காதில்லையா? இவற்றைவிட இன்னொரு அவஸ்தை. அதுதான் இன்னிசைக் கோஷ்டிகள். இரவு 7 மணிமுதல் சாமம் சாமமாக மறுநாள் காலை 5 மணிவரை "இன்னிசை கானங்கள்" ஒலிபரப்பிகளில் முழங்கி, மக்களைச் சித்திரவதை செய்கின்றன. அதாவது "இன்னிசை சித்திரவதை".

ஒலிபெருக்கிகளைப் பாவிப்பதற்கு கட்டுப்பாடு இல்லையா? நீதி பரிபாலிப்பவர்கள் இந்த அநீதியைக் காண்பதில்லையா?

சுன்னாகம். **பவீதா.**

## 788ஆம் இலக்க பஸ் சேவை திடீர், திடீரென ரத்தாவது ஏன்?

வடபிராந்திய போக்குவரத்துச் சபை மிகச் சிறப்பாகப் பணி புரிந்து வருவது யாவரும் அறிந்ததே. ஆனாலும் யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் இளவாலை நோக்கிச் செல்லும் 788ஆம் இலக்க பஸ்சேவை மிகவும் சீரற்று நடைபெறுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தினமும் காலையில் 7.15 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் இந்தப் பேருந்துச் சேவை, திடீர்திடீரென ரத்துச்செய்யப்படுகின்றது. மாலையிலும் இதேகதி பிற்பகல் 3 மணிக்கு இளவாலையில் இருந்து யாழ்.நோக்கிப் புறப்படும் பேருந்துச் சேவையும் அடிக்கடி ரத்துச் செயயப்படுகின்றது.

இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களும், பணிக்காக அலுவலகங்களுக்குச் செல்லும் உத்தியோகத்தர்களுமே. இந்த ஒழுங்கீன நிலைமைக்கு யார் பொறுப்பு? இதைவிட இப்பாதை பேருந்தின் சாரதியினதும், நடத்துநரதும் பண்பற்ற வார்த்தைப் பிரயோகங்களையும் பொறுக்கமுடியாதுள்ளது. எனவே தயவுசெய்து சம்பந்தப்பட்டவர்கள் இந்தச் சேவைகளை, அதாவது காலை 7.15 சேவையையும், பிற்பகல் 3 மணி சேவையையும் சீராக நடத்தி, இப்பகுதி மக்களின் துயர்களைய இனியாவது முயல்வார்களா?.

இளவாலை. **என்.சிவலோகசிவம்.**


இலங்கையின் முன்னணி தனியார் வர்த்தக வங்கியான

# ஹற்றன் நஷனல் வங்கியினால்

வருடாந்தம் நடத்தப்படும் 2001 ஆம் ஆண்டுக்கான

# கூடைப் பந்தாட்டப் போட்டி

போட்டியில் பங்குபற்றவிரும்பும் கழகங்கள் (ஆண்கள், பெண்கள்), பாடசாலைகள் (ஆண்கள் மட்டும்) தங்களது விண்ணப்பங்களை ஹற்றன் நஷனல் வங்கி யாழ்.கிளையில் சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றோம்.

விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித்திகதி 15-11-2001; அணி ஒழுங்குத் தெரிவு 16-11-2001 மாலை 3.30 மணிக்கு ஹற்றன் நஷனல் வங்கி யாழ்.கிளையில் இடம்பெறும்.


*குறிப்பு:-* அணி ஒழுங்குத் தெரிவின்போது பங்குபற்றும் கழகங்களிலிருந்து ஓர் உறுப்பினர் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

## ஹற்றன் நஷனல் வங்கி
## உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

- முகாமையாளர்.

(C/19176)


# 45ஆம் நாள் நீங்காத நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



26.09.2001 அன்று சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவர்

## முத்துலிங்கம் சதீஸ்குமார் (சசி)

*(உரிமையாளர், சந்நிதி முருகன் ஆட்டோ)*

மலர்வு 10-05-1966 — உதிர்வு 26-09-2001

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்தனை இன்று (09.11.2001) வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள், முச்சக்கர வண்டி ஊர்திசேவைச் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*விளையாட்டரங்க வீதி,*
*கோப்பாய் தெற்கு, கட்டப்பிராய்.* (94343)

- குடும்பத்தினர்

## வெற்றுச் சாக்கு, உரப்பை விற்பனைக்கு உண்டு

27.11.2001இற்குமுன் தொடர்புகொள்ளவும்.

யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்,
127, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 08.11.2001.

- பொதுமுகாமையாளர்.

(C/19177)

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் வரவு 02 - 08 - 1922



விண்ணில் நிறைவு 21 - 10 - 2000

அமரர் நவாலியூர்

**மருதர் முருகேசு** அவர்கள்

அறிவினில் உயர்வு தந்து
எல்லோரும் போற்ற வைத்தீர்!
நெறி முறை காட்டி நின்று
நேர் நிறை வாழ்வு தந்தீர்!
அறிமுகம் நிறைந்த உங்கள்
அன்பினால் உறவு ஈந்தீர்!
அறிவே திருவே நீரகன்று
ஆண்டு ஒன்றா னதப்பா!

*"குமரகிரி",*
*நாச்சிமார் கோயில் வீதி,*
*நவாலி வடக்கு, மானிப்பாய்.* (94351)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல் குதூகல ஆரம்பம்
*சரத்குமார், சுகன்யா, கவுண்டமணி மற்றும் பலர் நடித்த*

### இளவரசன்

*தினசரி 10.30, 2.30, (புதிய நேரம்)*
*சனி, ஞாயிறு 10.30, 2.5 (புதிய நேரம்)*

(C/18920)

## நாகம்ஸ் சுன்னாகம்

அஜித்குமார், மகேஸ்வரி, மணிவண்ணன் நடிப்பில்

### நேசம்

(ரீல்ஸ்)
*காட்சிகள்:- 11.00, 2.30 (பு.நே.)*

(94299)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, நாகேஷ்

### ஆயிரத்தில் ஒருவன்

0

தினசரி: 11.00, 2.30, 5.30

(C:18988)

## NEW SCIENCE COLLEGE

வெங்கடேசன் வீதி - யாழ்ப்பாணம்.

**2003 A/L**

✻ இரசாயனவியல் ✻
(வெப்ப இரசாயனம்)

திரு. மகேஸ்வரன் B.Sc.

சனி, ஞாயிறு - 9.00 மணி.

(94355) ஆரம்பம்:- 10.11.2001 சனி காலை 9.00 மணி

# அறிவித்தல்

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

இம்மாதம் 10ஆம், 11ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ள குறைநிவர்த்தி சேவையின்போது இந்துசமய கலாசாரத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள்:

- நலிவுற்ற கலைஞர்களுக்கான உதவித்திட்டத்தின்கீழ் உதவி பெறவிரும்பும் பாதிக்கப்பட்ட கலைஞர்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் நேரில்வரவும்.
- அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான (எல்லா வகுப்பும்) சைவ சமய கைந்நூல்கள் வழங்கப்படவுள்ளதால், பதிவு செய்யப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் நேரில்வந்து பெற்றுக் கொள்ளலாம்.
- இதுவரை தமது ஆலயங்களில், இந்து மன்றங்களில், அறநெறிப் பாடசாலையை நிறுவத் தவறிய ஆலய பரிபாலன சபைகள், நிர்வாக சபைகள், தர்மகர்த்தாக்கள் இதற்கான விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, இவ்வருட முடிவுக்குள் அறநெறிப் பாடசாலைகளை நிறுவும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- மூத்த கலைஞர்களைக் கௌரவிக்கும் வைபவம் 18.11.2001 இல் நல்லூரில் அமைந்துள்ள துர்க்கா தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ளதால், மூத்த கலைஞர்கள் தெரிவுக்கான பெயர்களை அனுப்பிவைக்கும்படி கலை கலாசார அமைப்புக்கள் இதன் வாயிலாகக் கோரப்படுகிறார்கள்.

பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

(C/19184)

# அறிவித்தல்

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு

## பனை அபிவிருத்திச் சபை

சீவல் தொழிலாளர்களுக்கான சங்கங்களும் அவற்றின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் வருமாறு:

| கிளை இல. | பனை, தென்னை கூட்டுறவுச் சங்கக் கிளைகளின் பெயர்கள் | விண்ணப்பித்த அங்கத்தவர்கள் மொ.எ. |
|---|---|---|
| 254, 256, 258, 259, 260, | | |
| 255, 261, 262, 264, 265 | | |
| 266 | அச்சுவேலி | 347 |
| 67, 73, 74, 75, 76 | பண்டத்தரிப்பு | 155 |
| 109, 110, 111, 112, 114 | தெல்லிப்பழை | 107 |
| 94, 101, 95, 96, 102, 103 | | |
| 99, 74 | ஊர்காவற்றுறை | 98 |
| | யாழ்ப்பாணம் | 91 |
| | கரவெட்டி | 189 |
| | பருத்தித்துறை | 184 |
| | அரியாலை | 69 |
| | கோப்பாய் | 243 |
| | மானிப்பாய் | 314 |
| | சங்கானை | 241 |
| | பளை | 154 |
| | வேலணை | 83 |
| | அனலைதீவு | 65 |
| | சாவகச்சேரி | 54 |
| | கோண்டாவில் | 281 |
| | காரைநகர் | 73 |
| | கொடிகாமம் | 64 |

★ சபையால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆயுள்காப்புறுதித் திட்டத்துக்கு இதுவரை விண்ணப்பித்த பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும் அவை சார்ந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

★ முதற்கட்டமாக ஒவ்வொரு சங்கங்களுக்கும் தனித்தனியாக அவர்களது மொத்த அங்கத்தவர்களுக்குமான கூட்டுக் காப்புறுதிப் பத்திரங்கள் சங்கப்பிரதிநிதிகளிடம் வைபவரீதியாகக் கையளிக்கப்படும். (இப்பத்திரத்தினூடாக அனைத்து அங்கத்தவர்களுக்கும் காப்புறுதிப் பணம் செலுத்தப்பட்டு, அவர்களுடைய ஆயுள்காப்புறுதி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது)

★ தொடர்ந்து 2ஆம் கட்டமாக ஒவ்வொரு தொழிலாளர்களுக்குமான தனித்தனிக் காப்புறுதி அட்டைகள் வழங்கப்படும். (இது அவர்களது தனிப்பட்ட உறுதிப்படுத்தலுக்கு வழங்கப்படும்)

★ இவ்வாயுள்காப்புறுதித் திட்டத்தில் இதுவரை இணைந்துகொள்ளாத சங்கங்கள் இருப்பின் இம்மாதம் 11ஆம் திகதிக்குமுன் இணைந்துகொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

*விசேட குறிப்பு:-*

கடந்த 5ஆண்டு காலப்பகுதியில் தொழிலாளர்கள் எவரேனும் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது விபத்துக்குள்ளாகி மரணமாகியிருந்தால், ஊனமுற்றிருந்தால் அது தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் பாதிக்கப்பட்ட குறிப்பிட்ட குடும்ப அங்கத்தவர்கள் இம்மாதம் 10ஆம், 11ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள நடமாடும் அமைச்சின் சேவையின் போது அங்குள்ள பனை அபிவிருத்திச் சபைக் காரியாலயத்துக்கு நேரில்வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

★ பாதிக்கப்பட்ட மேற்படி குடும்பத்தவர்களுக்கு அவர்களின் பிள்ளைகளின் கல்விக்கோ அல்லது விதவையாக்கப்பட்ட தாய்மாருக்கு சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

பனை அபிவிருத்திச் சபை,
நிறைவேற்றுப் பணிப்பாளர்.

(C/19185)

## மீசாலை கைத்தொழில் வணிகர் மன்றம்

எமது மன்றத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளைமறுதினம் (11.11.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கரவெட்டி கிழவிதோட்டப் பிள்ளையார் கோயில் முன்றிலில் நடைபெறும். அன்றைய தினம் நஷ்டஈட்டுப் படிவங்கள் வழங்கப்படவிருப்பதால் அங்கத்தவர்கள் தவறாது சமுகம் கொடுக்கவும்.

(94342)

- செயலாளர்.

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் அரிமாக்கழக நிர்வாக உறுப்பினர்
லயன் கனகசபை அருள்நேசன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கனகசபை நேசமலர்

அவர்கள் காலமானதையிட்டு கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/19187)

- நல்லூர் அரிமாக்கழகம்.

## மரண அறிவித்தல்

### புவிராஜா ஸ்ரீசந்திரராஜா

(ஆசிரியர், யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)

அச்சுவேலி, வளலாயைப் பிறப்பிடமாகவும் 38, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பு.ஸ்ரீசந்திரராஜா நேற்று (08.11.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் புவிராஜா - விசாலாட்சி தம்பதியினரின் அருமை மகனும், திருமதி ஸ்ரீ.சந்திரகுமாரியின் (ஆசிரியர், யாழ்/கன்னியர் மடம் ம.வி.) அன்புக் கணவரும் ஸ்ரீவரனின் அன்புத் தந்தையும் ஸ்ரீஸ்கந்தராஜா (ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி), ஸ்ரீசுந்தரராஜா (மருந்தாளர், அரசினர் வைத்தியசாலை - சங்கானை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி ஸ்ரீ.சசிக்கா (ஆசிரியர், யாழ்.மத்தியகல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஸ்ரீ.சமித்பா, ஸ்ரீ.அருண்யா ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் காலஞ்சென்ற மாணிக்கம், திருமதி மா.தங்கம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் மா.ஜீவானந்தம், மா.லோகசிங்கம் (ஆசிரியர், உடுப்பிட்டி மெதடிஸ்த ம.வி.), மா.லோகநாதன் (கனடா), லலிதா, மனோரஞ்சிதம், சந்திரலேகா, செந்தாமரை, லோகேஸ்வரி, விஜயகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2001) வெள்ளிக்கிழமை 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*38, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(94359)

தகவல்:
மனைவி

# வவுனியா நகர மண்டபத்தில் நிமால் நினைவுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.9

ஊடகவியலாளர் அமரர் மயில்வாகனம் நிமலராஜன் ஞாபகார்த்தக் கருத்தரங்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், 'ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் இலங்கை சுதந்திர ஊடக அமைப்பின் அமைப்பாளர் சுனந்த தேசப்பிரியவும் - 'மாறிவரும் வன்னிச் சமூகம்' என்ற தலைப்பில் எழுத்தாளரும் ஓய்வுபெற்ற கல்வி அதிகாரியுமான முல்லைமணி வே.சுப்பிரமணியமும் உரையாற்றுவர்.

(ஐ)

## நிர்வாணமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரான சஜித் பிரேமதாஸா தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொ.ஐ.முன்னணியினரின் வன்முறைகள், அச்சுறுத்தல்கள் எல்லை மீறிவிட்டதாகவும் -

ஐ.தே.கட்சியின் அலுவலகங்களை திறக்க விடுகின்றார்கள் இல்லை என்றும் -

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மகன் சஜித் பிரேமதாஸா தெரிவித்தார்.

(உ)

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்கா மீது தாக்குதல் நடத்தப்பட்டதன் காரணமாக பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.

"யுத்தத்துக்கு முடிவு கண்டு சமாதானத்தை ஏற்படுத்துவதுதான் எமது அடுத்த இலக்கு. சமாதானத்தை எட்ட வேண்டிய செயலில் 70 சதவீதம் பூர்த்தியாக்கியுள்ளேன். மீதியை முடிக்க வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு. இந்த யுத்தத்தை விரைவில் முடிக்க எமது அரசாங்கத்தால் முடியும் என்று கூற விரும்புகிறேன்.

"இன்று உலகில் பயங்கரவாதம் பெரும் அச்சுறுத்தலாக உருவாகியுள்ளது. சர்வதேசமும் அந்த அச்சுறுத்தலுக்கு எதிராக செயற்படத் தயாராகிவிட்டது. நாமும் அதில் இணைந்துள்ளோம்.

"நாட்டில் முன்னர் தாக்குதல் இடம்பெற்றபோது சர்வதேசம் சும்மா பார்த்துக்கொண்டு இருந்தது. இப்போது எமது நாட்டு பயங்கரவாதத்துக்கு எதிராகவும் சர்வதேசம் குரல் கொடுக்கின்றது. இந்தச் சூழ்நிலையை பயன்படுத்தி நாட்டில் நிலவும் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும் என நம்புகின்றேன்."

- இப்படி ஜனாதிபதி கூறினார்.

(உ)


### முக்கிய அறிவித்தல்

"சுந்தர் வெளியீடு" நிர்வாக இயக்குநரின் சகோதரர் காலமானதையிட்டு இன்று 09.11.2001 முதல் நடைபெறவிருந்த "சுந்தர் வெளியீடு" நிறுவனத்தினது அனைத்துத் தவணை, மாதிரிப் பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

(94358)

நிர்வாக இயக்குநர்,
சுந்தர் வெளியீடு

### அதிரடிச் சலுகை

தீபாவளியை முன்னிட்டு ஓடியோ CD கள் யாவும் CD யுடன் 175/= கட்டணத்தில் பதிவு செய்து தரப்படும். இச்சலுகை 15.11.2001 மட்டுமே.

மூர்த்தி வீடியோ
மானிப்பாய்.
(C/19186)

### தீபாவளியை முன்னிட்டு
## காவேரியின்
## அதி உயர் சிறப்புத் தள்ளுபடி!

❖ பண்டிகைகளை முன்னிட்டு, உங்களுக்கென பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்டவை. ❖ முகூர்த்தப் பட்டுப் புடைவைகள் ❖ வேட்டிகள்
❖ நங்கையர் மனங்கவர் வர்ணங்களிலான கவுண், ஸ்கேட் & பிளவ்ஸ், பஞ்சாபி வகைகள், சாறிகள், சாறிகளுக்கேற்ற பிளவ்ஸ் தினுசுகள்
❖ ஆடவர்க்கான சேட், ரீ சேட், ஜீன்ஸ் வகைகள் ❖ மற்றும் சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்குமான அனைத்து ரக புடைவை வகைகளும் ஒரே இடமாக சிறப்புத் தள்ளுபடியில் விற்பனையாகின்றன.

## காவேரி சில்க்ஸ்

48, பெரியகடை வீதி, (C/19125) யாழ்ப்பாணம்.

### தீபாவளியை முன்னிட்டு
## சோதி ரெக்ஸ்ரைல்ஸின்
## சிறப்புத் தள்ளுபடி...!



❖ திருமணப் பட்டுப் புடைவைகள் ❖ வேட்டி வகைகள்
❖ ஆடவருக்கான சேட், ரீசேட், சொக்கோ ஜீன்ஸ்
❖ சிறுவர் சிறுமிகளுக்கான கவுன், ஸ்கேட் பிளவுஸ், பஞ்சாபி வகைகள், சூட் வகைகள்
❖ நங்கையருக்கான கவுண், வெல்வெட் ஸ்கேட் பிளவுஸ், பஞ்சாபி வகைகள்
❖ அனைத்து சாறி வகைகளுக்குமான பிளவுஸ் வகைகள்

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



## சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

இல.14, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P. - 2139

பிளவுஸ் பீஸ் வகைகளுக்கு:
இல.21C, நவீனசந்தை,
மேல்மாடி, யாழ்ப்பாணம்.

(C/18990)

## விற்பனைக்கு உண்டு

CANON:- 1215, 6016, 6012 ஆகிய மொடல் வகைகளுக்கு
ரோனர், வீல்செற், ரம், ரம்யூனிட், வல்ப் வகைகள்,
கொறனர் சயிட் பிறக் மற்றும் லெமினேற்றிங்
I.C. கவர் பேப்பர் வகைகள் விற்பனைக்கு உண்டு.
கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட CANON 1215 மெசின் விற்பனைக்கு உண்டு.

ராஜா கொம்பிளக்ஸ்,
87, K.K.S. Road,
சுன்னாகம்.
(சுன்னாகம் M.P.C.S. தலைமைக்காரியாலயம் முன்பாக)

(94311)

## ரவி அன் ராஜ் சில்க்ஸ்

### தீபாவளியின்
### மாபெரும் விஷேட சலுகை விற்பனை

**சாறி வகைகள்**
* விப்றோசி
* மழைத்துளி
* சூரி
* திராங்
* நவீன்
* கொட்டன் செக்
* றிச் கொட்டன்
* மைகோ
* றஞ்னா
* நீலம் (மல்ரி கொட்டன்)
* மூன் லைற்
* கடற் பூக்கள்
* றேமன்ட் கிறேப் சாறி
* மிலேனியம் கிவ்ற்
* அனமிகா
* றங்கீலா

**ரீசேட்ஸ்**
* (f) பிளெப் அப் ரீசேட்ஸ்
* போலோ ரீசேட்ஸ்
* அடிடாஸ் (வீனெக்)
* ஒன்லி யூ
* அலிசிஸ்
* ரச் மீ
* செமைஸ் லாகோஸ்ற்
* லாஜ் மென் (வெல்வெற்)
* (B) பீ கிறேற் (வெல்வெற்)

**சேட்ஸ்**
* புளூ புளெட்
* லான்ட் என்ட்
* ரடோ
* றிச் லுக்
* றெட் வீவ்
* லிமிரெட்

மற்றும் ஆடவர் பெண்கள் சிறுவர் சிறுமிகளுக் கேற்ற புதிய டிசையின்களில் றெடிமேட் ஆடைகள் அனைத்தும் விஷேட சலுகை விற்பனையில் தற்போது விற்பனையாகிக் கொண்டிருப்பதால் உங்கள் தெரிவுகளுக்கு இன்றே விரையுங்கள்------!

ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, பெரிய கடை
யாழ்ப்பாணம்.
T.P: 2469

## SPECIAL COMPUTER COURSES
START ON 18-11-2001 AT 10.00 AM

*Certificate in Java Programming*
Duration: 4 Months Fee: 2500/=

*Certificate in Computer Hardware Engineering*
Duration: 4 Months Fee: 3000/=

*Certificate in Web Designing*
(Flash,Front Page and HTML)
Duration: 3 Months Fee: 3000/=

*Diploma in MS Office*
Duration: 5 Months Fee: 3000/=

மேற்படி பிரிவுகளுக்கு பதிவுக் கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது

மேற்படி பிரிவுகளுக்கான விரிவுரைகள் யாவும் வார நாட்களும், வார இறுதி நாட்களிலும் காலை, மாலை வகுப்புக்களாகவும் நடைபெறும்

INSTITUTE OF INFORMATICS STUDIES
100 Clock Tower Road,Jaffna
T.P No: 021-2831 Email: iis@sltnet.lk

### கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன ஆசிரியர்

**பு.ஸ்ரீசந்திரராஜா.**

காலமானதையிட்டு, அன்னாரிற்கு எம்கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

சுந்தர் வெளியீடு,
38, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(94357)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.